மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

மலர் 2 | 15 - 1 - 54 | இதழ் 18

பெரியார் வாழ்க



சூழ்ந்துவரும் ஆறு—வயலைச்
சுற்றிவரும் உழவர்.

உள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளி நாடு அணா 5

மலர் ஒன்று பூத்தது !

[கவிஞர் வாணிதாசன்]

வாடாப் பசும்பொன் மலர் ஒன்று பூத்தது வார்கடல்மேல்
பாடாக் குயிலும் பனியும் அகன்றன ; பைம்பொனொளிக்
காடாம் தொடுவான் ! கிளையெலாம் பூக்கள் ! கனிகுலுங்கும்
ஓடா திருக்க இயலுமோ வாடைப் பெரும்பகையே ?

புதுநெல் அரிசி புதுப்புனல் ஆப்பால் கருப்பங்கட்டி
கொதித்திடும் பானையில் "பொங்கலோ ! பொங்கல்" குளிர்ந்ததுள்ளம் !
குதித்தனர் ; ஆர்த்தார் ; இசைத்தார் தமிழர். உடலுயிரில்
உதித்ததே இன்பம் கிழக்கில் பரிதி உதித்ததாலே !

கன்னல் வயலில் ! முதிர்ந்த கனிதோப்பில் ! கட்டுச்சாட்டாய்ச்
செந்நெல் களத்தில் ! செழும்புனல் ஆற்றில் ! புதரிலெங்கும்
இன்னிசைப் பாட்டு ! தமிழின் முழக்கம் ! இளந்தமிழர்,
முன்வரும் எந்தப் பகையும்தூ ளாக முறிந்ததுவே !

வீட்டில் மகிழ்ச்சி ! வெளியில் மகிழ்ச்சி ! விளைந்தவயற்
காட்டில் மகிழ்ச்சி ! கடையில் மகிழ்ச்சி ! திருவிடமாம்
நாட்டில் மகிழ்ச்சி ! இதுநாள் வரையில் உழைத்தவர்கள்
பாட்டில் மகிழ்ச்சி ! மகிழ்ச்சி பழமை அகன்றதாலே!

நன்னாள் ! திராவிடர் பொன்னாள் ! புதுநாள் ! இப்பொங்கல்நன்னாள் !
உன்னரும் நாட்டை, உயிராம்தாய் நாட்டைத் திராவிடத்தை
இன்னே அடைவோம் ! எழுவாய் தமிழா இளங்கதிர்போல்
முன்னே முளைத்த பகையைப் பொடியாய் நொறுக்கநீயே !!

15-1-54 வெள்ளிக்கிழமை

பொங்கல் திருநாள்

பொங்கற் புது நாள் வந்தது! தமிழரின் திருநாள் வந்தது!

அந்த நன்னாளன்று "பொங்கலோ, பொங்கல்! பொங்குக பாலோ! பொங்குக செல்வம்! பொங்குக வாழ்வு! மங்காத திராவிடமெங்கும் தங்குக இன்பம்!" என நாம் மன மகிழ்ச்சியோடு வாழ்த்துரை வழங்குகிறோம். செந்தமிழ் நாட்டினர் அனைவருக்கும், செந்நெற் கழனிதோறும் செறிந்து விளங்கிடும் உழவர் பெருங்குடி மக்களனைவருக்கும் நமது வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். அன்பாலே நம்மையெல்லாம் பிணைத்து, பண்புடனே நம்மைப் பாதுகாத்து, கண்ணியமும் கருத்தும் பிறழாத வழியில் நம்மை ஈடுபடச்செய்த நமது முதல்வர்—குடும்பத் தலைவர்—அறிஞர் அண்ணா அவர்களுக்கும், இன்னல் பல தாக்கிய போதும் இடர்பல சூழ்ந்தபோதும், மனந் தளராது, சொந்த வாழ்வில் காணக்கிடைக்காத மகிழ்ச்சியை—மனவெழுச்சியை பொதுவாழ்வில் பெற உழைத்திடும் நமது இயக்கத் தோழர்கள் அனைவருக்கும்—நமது குடும்பத்தினர் அனைவருக்கும் வாழ்த்துதலை வழங்குகிறோம், மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இயக்க அன்பர்கள், இளைஞர்கள், மாணவர்கள், நமது கழகத்தினிடம் தோழமை பூண்டோர், அதன் அடிப்படைக் கருத்துக்களுக்கு ஆதரவு காட்டுவோர் அனைவருக்கும் நமது உளங்கனிந்த வாழ்த்துதலை அளிக்கிறோம்! மற்ற அரசியல் கட்சியினர், வேறு பல துறைகளில் மக்கள் வாழ, நாடு நலம்பெற வேண்டுமென பாடுபடுவோர், எதிர்க்கட்சியினர்—தம்மை நமக்கு எதிர்க்கட்சியினர் என்று நினைத்துக் கொண்டிருப்போர், உண்மையிலேயே மாற்றார்—இந்த மங்கல நன்னாளில் அவர்களுக்கும், நமது வாழ்த்தையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்!

குளிர் நீங்கியது, பனி விலகியது, இருள் கலைந்தது! மலர்ந்த காலைப் போதினிலே, விரிந்த கதிரவனொளியிலே, தமிழகத்தின் வீதிகள் புதுமைக்கோலத்துடன் காட்சியளிக்கின்றன. புதுச்சாந்து பூசப்பட்டு வெண்மையாக விளங்கிடும் வீடுகள், புழுதியும் குப்பையும் அகற்றப்பட்ட தரை, அங்கே சின்னஞ் சிறுமியர் தமது சிறு விரல்களால் இழைத்துப் போட்டிடும் வண்ணக் கோலங்கள், அவற்றின் மீது அடுக்கப்பட்ட பலவித மலர்கள், புத்தாடை பூண்டு நடமாடும் இளைஞர்கள், பொன்னுடை புரள, முகத்திலே புன்னகை தவழ செல்லும் மகளிர், கரும்பையேக் கோலாகக் கொண்டு, காவல் காத்திடும் வீரர்கள்போன்று எல்லாவற்றையும் கண்காணித்துக்கொண்டு வரும் சிறுவர் கூட்டம், இது மற்ற நாட்களில் காணமுடியாத காட்சியாக பொங்கல் திருநாளன்று காணக்கிடைக்கிறது.

பொங்கல் திருநாள், உழவர் கொண்டாடும் நன்னாள்! உழவுக்கும், உழைப்புக்கும் பாராட்டைத் தெரிவிக்கும் பெருநாள்! அல்லும் பகலும் உழைப்போர் ஆண்டிற்கோர்முறையேனும் அகமும் புறமும் களிப்படைய, வரவேற்றிடும் விழாநாள்!

செந்நெல் குவிந்தது! செங்கரும்பும் வந்தது! தோட்டத்திலே வாழையும், கமுகும், தாழ்குலைத் தெங்கும், மஞ்சளும், இஞ்சியும், தேனினுமினிய செஞ்சுளைப் பலாவும், தமது முதிர்ந்த பலனைத் தந்தன! இல்லங்களில் பசுந்தழையும், இளந்தோரணமும், மெல்லிதழ்க் கொத்துகளும், பூவும், புகையும், வண்ணமும், சாந்தும், நறுமணப் பொருள்களும், பல்வகைப் பண்டங்களும், நிறைந்திருக்கின்றன. அதோ! முற்றத்தில் இடப்பட்ட அடுப்பின் முன் நின்று, புதுப்பானையில் தீம்பாலமுதைச் செய்திடும் பணியிலே மங்கை நல்லாள் ஈடுபட்டிருக்கிறாள். ஒரு கையால் கரண்டிகொண்டு பானையைக் கிளறிவிட, அவிழ்ந்து விழும் கூந்தலை மற்றொரு கையால் அள்ளி முடிந்திட, கூந்தலிலே செருகியிருந்த மலர்ச்சரம் தாழ்ந்து கண்மலரை மறைத்திட, தலையை யசைத்து அதை விலக்கியபடி, அவள்

பானையில் பொங்கிவரும் இன்னமுதைப் பாதுகாப்பதில் கண்ணுங்கருத்துமாயிருக்கிறாள். அவளுடைய இளஞ்செல்வனோ — "சென்ற பொங்கலுக்கு போட்ட இடத்திலேயே சிரித்துக்கொண்டு கிடப்பான். இந்தப் பொங்கலுக்கு எவ்வளவு தொந்தரவு தருகிறான்!" என்று கூறும்படி அந்தச் சிறு மகன், கரும்பை எடுக்கப்போய், பலாப்பழத்தை உருட்டிவிட அது குவித்துவைக்கப்பட்டிருந்த தேங்காய்களைத் தாக்கிட, சிதறிய தேங்காய்கள் வாழைப்பழங்களை நசுக்கி, மஞ்சள் செடிகளைத் துவைத்து, வாழையிலைகளைச் சுருட்டிக்கொண்டு, செம்பிலும், பானையிலும், அடுப்பிலும், அதற்குமுன் நிற்கும் அவனுடைய அன்னையின் காலிலும் மோதிக்கொண்டு நிற்கின்றன. மகன் செய்யும் கோலங்கண்டு அவள் கோபிக்கிறாள். அந்தச் சிறுவனோ கைகொட்டிச் சிரிக்கிறான்! அடுப்பையும் விட்டு நீங்க முடியாதபடி, அடாது செய்யும் மகனையும் அடக்கமுடியாத நிலையில், "நீங்களாவது இந்தக் குறும்பனைப் பார்த்துக் கொள்ளக்கூடாதா?" என்று எல்லாவற்றையும் வேடிக்கைபார்த்துக்கொண்டிருக்கும் தன் கணவனைக் கோபப்பார்வையுடன் கேட்க, அவளுடைய கண்ணாளனோ "நீங்களிருவரும் செய்வதையும் பார்த்தபடிதானே நான் உட்கார்ந்திருக்கிறேன்!" என்று மறுமொழி பகர, அப்பொழுதுதான் அவளுடைய அரைகுறை வேலையை இடித்துக்காட்டுபவள்போல பக்கத்து வீட்டுத் தோழி "பால் பொங்கிற்றா, பொங்கல் முடிந்ததா?" என்று கேட்டவண்ணம் உள்ளே வர, இவர்களுக்கெல்லாம் என்ன பதில் சொல்வதெனத் தெரியாமல் அவள் நிற்க, அதற்குள் பானையிலிருந்து பாலும் சோறும் பொங்கி வழிய, மற்றவற்றை மறந்து இன்னமுதை எடுத்திட முனைகிறாள் அந்த இளமங்கை! தமிழகமெங்கும் மகளிர் பொங்கல் ஆக்கிடும்—வாழ்விலே இன்பத்தைச் சேர்த்திடும் காட்சிகள் பலப்பல.

ஆடலில் பாடலில் வீடுகள் சிறந்திட, ஊடலில் கூடலில் மடவார் உவந்திட, பொங்கற் புதுநாள் வருகிறது, தையின் முதல்நாள் வருகிறது! அந்த உழவர் பெருநாளன்று மாடு கன்றுகளும் விழாக்கோலம் கொள்ளுகின்றன! மாடுகளை விரட்டிப் பிடித்திடும் வல்லோசையும், மகளிர்கள் ஆடிப்பாடிடும் கும்மிப்பாட்டுகளும், வீதியிலே பலர் கூடி "பொங்கலோ பொங்கல்!" எனக் கூவிடும் வாழ்த்தொலியும் ஒன்றையொன்று அடுத்து வருகின்றன!

தமிழகத்துள் புகுந்துள்ள பிற விழாக்களைப் போலன்றி, தமிழர் பண்பாட்டை விளக்கிடும் உயர்தர விழா பொங்கலாகும்! மகனைத் தாய் கொன்ற நாளிதுவென யாரும் மகிழ்ச்சி காட்டிடவோ, பெம்மான் பிள்ளைக்கறி கேட்ட நாளிதுதானெனப் பெருமை பேசிடவோ இந்த நாள் ஏற்பட்டதல்ல! ஆகாத கற்பனைகள், அறிவுக்கொவ்வாத ஏற்பாடுகள் தமிழர் கொண்டாடும் பொங்கல் திருநாளில் கிடையாது! பண்படுத்தி, பரம்படித்து, எருவிட்டு, ஏர் பிடித்து, விதை தூவி, நாற்று நட்டு, களையெடுத்து, பயிர்காத்து, சேற்றிலே செந்நெல்லைக் கண்டெடுத்திடும் உழவரின் விழா பொங்கலாகும்! அறுவடையை முடித்து, பெற்ற பலனைக் குவித்து, உழவர் பெருமக்கள் கொண்டாடிடும் நன்னாள் பொங்கலே!

ஆனாலும், பொங்கற் புதுநாளைக் கொண்டாடும்பொழுதும் புத்தாண்டு வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொள்ளும்பொழுதும், நாட்டின் நிலைமையும், குறிப்பாக பொங்கலில் முதன்மையாக வைத்துப் போற்றப்படும் உழவுத் தொழிலில் ஈடுபட்டிருப்போரின் நிலையையும் நாம் உணராதவர்களல்ல. பொங்கல் நாளன்று "பால் பொங்கிற்றா?" எனக் கேட்போரில் எண்ணற்றோர், மற்ற நாட்களிலெல்லாம் கண்ணீர் பொங்கிட, வேதனையில் உழல்கிறார்கள் என்பதை நாமறிவோம். "பத்து விரல்களால் பாடுபட்டும் ஐந்து விரல்களால் அள்ளி உண்ண முடியவில்லையே" என ஏங்கிடும் கோடிக்கணக்கானவர்கள் நம் நாட்டில் உள்ளனர். வறுமையிலும், வாட்டத்திலும், பஞ்சத்திலும், பட்டினியிலும் அல்லற்படும் குடும்பங்கள் அளவிட முடியாதன. சமூகக்கொடுமையெனும் சாட்டையால் அடிக்கப்பட்டு, ஏழ்மையெனும் சேற்றிலே தள்ளப்பட்டு துடித்திடும் சிறுவர்கள் ஏராளம். கல்வி கற்று, ஓடியாடி விளையாட வேண்டிய இளம்பருவத்தில், கல்லெடுத்தும், புல் சுமந்தும், சேறு குழைத்தும், வீதி பெருக்கியும், ஒட்டிய வயறுடன், உலர்ந்த கண்களுடன், வாழ்வு என்றாலே இன்னதென்று தெரியாது வாழ்ந்திடுகின்றனர், நாட்டின் சிறுவர்களில் பெரும்பகுதியினர். இந்தப் பாழும் சமூகத்தில் அவர்கள் ஏழைகளாக, தாழ்ந்தவர்களாக, பராரிகளாக, பாடுபடுபவர்களாகப்

பிறந்துவிடுகின்றனர். பின் அவர்களுடைய நிலை என்றுமே மாறுவதில்லை. காடுகளைத் தோட்டமாக்கினோர், கரம்புகளைக் கழனிகளாக மாற்றினோர், ஏர் பிடித்து நிலத்தை உழுதோர், ஏற்றம் பிடித்து நீரைப் பாய்ச்சினோர்—அவர்களுடைய சீரிய முயற்சியிலே, சிந்தியவியர்வையிலே தக்க பலன்கிடைத்தது. ஆனால் பாடுபட்டோருக்கு அந்தப் பலன் கிடைக்கவில்லை. உழைப்போர் உழைத்துழைத்து அலுத்துப்போக, யாரோ ஒரு சில உயர்ந்த வகுப்பினர், உல்லாச வாழ்வினர், உப்பிரவிப்பிரர்கள் மட்டுமே அந்தப் பலன்களை—நாட்டில் பெருகிய வளத்தை அனுபவிக்க முடிந்தது. உழைப்பாளர்களைத் தாழ்ந்தவர்களாக—ஏழைகளாக வைப்பதில், சமுகத்தின் சட்டதிட்டங்கள், சாஸ்திர சம்பரதாயங்கள் கட்டுப்பாடாக இருக்கின்றன. வந்திருக்கும் ஆளவந்தாரின் அபூர்வ திட்டங்களோ, அந்த ஏழைகளை—ஏங்கித் தவித்திடும் உழவர் குடி மக்களை என்றென்றும் ஏழ்மைக் குழியிலே, அறியாமைச் சேற்றிலே அழுத்திவைக்கவே பாடுபடுகின்றன. நாட்டின் இளம் சிறுவர்களின் எதிர்கால வாழ்வு மிகவும் இருண்டதாக்கப்பட்டிருக்கிறது, அண்மையில் நாட்டிலே நுழைக்கப்பட்டுள்ள ஆகாத கல்வித்திட்டங்களால். உடல் வலிவற்ற ஒருவன் கற்களும் பாறைகளும் செறிந்த மலைச்சரிவில் நடந்து மேலேறிச் செல்வது கடினம், அப்படியிருக்கும் பொழுது, அவனுடைய கண்களையும் குருடாக்கிவிட்டால், அவனால் எவ்வாறு முன்னேறிச் செல்லமுடியும்? அவ்வாறு ஏழைச் சிறுவர்கள் படிப்பதற்கே இடர்ப்பாடுகளும் தடைகளும் பலவிருக்கின்றன. அந்த நிலையில் அவர்களுக்குச் சிறிதளவாவது துணைபுரிந்த அறிவுக் கண்களையும் அவித்துவிட்டால்....! நாட்டின் இளஞ் சிறுவர்களைப் பாதுகாத்திடும் பொறுப்பு அவர்களை எதிர்காலச் செல்வங்களாக ஆக்கிடும் பொறுப்பு நம்மிடம் இருக்கிறது.

பொங்கல் நன்னாளில் இருள் கலைந்தது, பனி விலகியது, குளிர் நீங்கியது என மகிழ்கிறோம். அதே சமயத்தில், தமிழகத்தின்மீது கலையாத இருள், விலகாத பனி, நீங்காத குளிர் மூடிக்கிடப்பதும் நமது நினைவுக்கு வருகிறது. அறியாமையெனும் இருள், ஆரியம் விரித்த பனிப்படலம், வடக்கிலிருந்து வீசும் வாடைக் காற்று, இவைகள் நமது நாட்டை சூழ்ந்திருக்கின்றன. என்று விலகும் இந்த இருள்? என்று கலையும் இந்தப் பனி? என்று ஒழியும் இந்த வாடை? இருளும், பனியும், குளிரும் என்றும் நீடித்திருப்பவையல்ல, அல்லற்படுத்தியபோதிலும், மனிதனை அழித்துவிடும் ஆற்றலற்றவை, அவை ஒழிவது உறுதி, பொங்கற் புதுநாள் வருவதும் உறுதி என உழவரின் விழா நமக்கு அறிவுறுத்துகிறது. இருள் விலகிட, அறிவென்னும் கதிரோன் ஒளி பரப்புவான்; பனி விலகிட, நமது விடுதலைக் காலை மலரும்; வாடைதரும் தொல்லை நீங்க, "வாழ்க, வாழ்க, வளயார் எமது திராவிடம்!" என்ற இலட்சிய கீததத்தைத் தாங்கி தென் திசையிலிருந்து தென்றற் காற்று கிளம்பிடும். புத்தாண்டு—நமது வரலாற்றிலே புதியதோர் காலம் பிறக்கும்.

பண்படுத்திய வயலில் விதை தூவியதும், பயிர் வளர்ந்து, கதிர் சாய்ந்து செந்நெல்லை எடுத்திடும்வரை உழவன் எடுத்துக்கொள்ளும் கவலை—உழைப்பு—கண்காணிப்பு—பொறுப்பு மிக அதிகமாகும். அதைப்போலவே நமது பலனை அடையும் வரை கலங்காது பணியாற்ற வேண்டும். பண்பட்ட உள்ளங்களில் நமது இலட்சியமெனும் விதையைத் தூவியுள்ளோம். வளர்ந்துவரும் இளம்பயிரைப் பாதுகாத்து, வளர்த்து, பலன் கிடைக்கும் வரையில் நாம் முழுக் கவனத்துடன் பாடுபடத்தான் வேண்டும். சிலசமயத்தில் நமது பச்சை ரத்தத்தைப் பறிமாறி, சிலரைப் பலி தந்து, இந்தப் பயிரைப் பாதுகாக்கவேண்டி யிருக்கிறது. ஆந்தைகள் அலறினால் கவனிக்காமல், நரிகள் ஊளையிட்டால் அலட்சியம் செய்து, கட்டுப்பாடற்ற காட்டெருமை உள் நுழைந்து பயிரை நாசமாக்க முயன்றால் அதை எதிர்த்து விரட்டி, வரப்புயர வளமுயரும் என்றவகையில் நாமே அமைத்துக்கொண்ட ஒழுங்குமுறை யெனும் வரப்பு சிதையாமல், பயிரின் பசுமை குறையாமல் பாதுகாத்துவந்தால், நாம் தூவிய விதை அழிந்துவிடாது, நாம் அளித்த உழைப்பு, வீண்போகாது.

பொங்கல் நன்னாளில், புத்தாண்டின் தொடக்கத்தில், புதிய முறுக்குடன், புதிய உற்சாகத்துடன் நமது பணியைச் தொடர்ந்து செய்திடுவோமாக, "வாழ்க திங்கள், வாழ்க செங்கதிர், வாழ்க, வாழ்க வளமார் எமது திராவிடம்" என்ற வாழ்த்துடன், மகிழ்ச்சியுடன், பூரிப்புடன்.

மகளிர் பொங்கல்

[பாரதிதாசன்]

பொன்னூசல் எல்லோரும் ஆடுவமே—நல்ல
பொங்கற் புதுநாளைப் பாடுவமே

தென்னாடு வாழியஎன் றாடுவமே—நல்ல
செம்பரிதி வாழியஎன் றாடுவமே

கன்னடம் தெலுங்குமலை யாளம் துளுவம்—நல்ல
கன்னல்நிகர் செந்தமிழும் ஒன்றென்றே
மன்னிய திராவிடர்கள்—எல்லோரும்—பிறர்
வந்தசைக்க வொண்ணாத குன்றென்றே (பொ)

சந்தனப் பொதிகைமலை எங்கள் உடைமை—வெண்
சங்கெறியும் தென்குமரி எங்கள் உடைமை
வந்தசைக்க வொண்ணாத மறவர் நிலம்—நல்ல
வங்கம் வரை எங்கள்நிலம் வாழியஎன்றே (பொ)

முத்தெடுக்கும் மூன்றுகடல் நட்டநடுவில்—நல்ல
முல்லை மருதம்குறிஞ்சி நெய்தல் கிடந்தே
மெத்தநலம் செய்திடும் திராவிட நிலம்—நன்கு
வெல்க வெல்க வெல்க வெல்க வெல்க எனவே (பொ)

கருத்துக் கதிர்

தி. மு. க. வகுப்புவாத இயக்கமா?

திராவிடத்திலுள்ள மக்கள் பல்வேறு சாதிகளாகப் பிரிந்திருப்பதற்குக் காரணங்கள் என்ன என்பதைக் கண்டறிந்து, அந்தக் காரணங்களைப் போக்குவதிலும் மக்களை ஒரே சமூகமாக ஒருநிலைப்படுத்துவதிலும் முனைந்து நிற்பது திராவிட முன்னேற்றக் கழகமாகும்.

பன்னெடும் நூற்றாண்டுகளாகச் சாதியின் பேரால் தள்ளப்பட்டு, ஒடுக்கப்பட்டுப், பிற்படுத்தப்பட்டுத், தாழ்த்தப்பட்டுக் கிடக்கும் வகுப்பினர்க்கு, அவர்கள் தாழ்த்தப்பட்ட—தள்ளப்பட்ட அளவுக்குச் சலுகைகள் காட்டினால்தான், பிற்படுத்தப்பட்டவர்கள் முன்னேறி, உயர்ந்த வகுப்பினர் நிலையை அடைவார்கள், அப்பொழுது உயர்வு தாழ்வு என்ற பேதம் போகும், மனித சமுதாயம் ஒன்று என்ற நிலைமை ஏற்படும் என்ற கருத்தில்தான், திராவிட முன்னேற்றக் கழகம், வகுப்புரிமைபற்றிப் பேசிவருகிறது; அதனை வாய்ப்பு ஏற்படுமிடங்களிலெல்லாம் வற்புறுத்தியும் வருகிறது. பிற்படுத்தப்பட்ட-தாழ்த்தப்பட்ட வகுப்பினர்க்கு உரிமையும் சலுகையும் கேட்பது, வகுப்புகளை உயர்நிலையில் ஒன்றுபடுத்தவேயல்லாமல், வகுப்புகளை நிலைநாட்ட அல்ல என்பதைக் கருத்துக் குருடர்களைத் தவிர, ஏனையோர் உணர்வார்கள்.

சென்ற இருபத்தைந்து ஆண்டு காலமாக பிற்பட்ட—தாழ்வுபட்ட வகுப்பினர்க்குச் சலுகையும் உரிமையும் ஓரளவுக்குக் கொடுக்கப்பட்டுவந்ததன் காரணமாகத்தான், சாதிவேற்றுமைக்கான அறிகுறிகள் குறைந்து, சமுதாய சமத்துவ நிலை ஆங்காங்கு அரும்பிவரக் காண்கிறோம்.

சுருங்கக் கூறினால், திராவிட முன்னேற்றக் கழகம் வகுப்புகளை ஒரு நிலைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு, அதற்கான வழிவகைகளைக் காண தொண்டு புரிந்துவருகிறது. இந்த உண்மையை அறிந்துகொள்ளமாட்டாத அறிவிலிகளும், இந்த உண்மையை மறைத்துவிட்டுத் திரித்துக் கூறும் அரசியல் வஞ்சகர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தை, வகுப்பை நிலைநாட்ட விரும்புமொரு வகுப்புவாத இயக்கம் என்று, தான்தோன்றித்தனமாகச் சொல்லித்திரிகின்றனர். இந்தப் பட்டியலில் இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி தன்னை அடிக்கடி ஈடுபடுத்திக் காட்டிக்கொள்ளத் தவறுவதில்லை.

அண்மையில், பத்திரிகை நிருபர் கேட்ட கேள்விக்கு விடையிறுக்கும் முறையில், கம்யூனிஸ்டுக் கட்சிக் காரியதரிசி தோழர் நம்பூதிரிப்பாடு அவர்கள் தி. மு. க-வைப்பற்றிய கருத்தை வெளியிட்டுள்ளார். தி. மு. க. வகுப்பை நிலைநாட்டும் இயக்கம் என்று தவறுபடக் கருதிக்கொண்டு, அதுதான் அதன் அடிப்படைக் கொள்கை என்றும் கருதிக்கொண்டு, அந்தக் கொள்கையைக் தாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம், எதிர்த்துப் போராடுவோம் என்ற முறையில் அவர் கருத்து வெளியிட்டுள்ளார். தி. மு. க. பற்றிய தவறான கருத்தின்மீது எண்ணங்களையும், நடவடிக்கைகளையும் கம்யூனிஸ்டுகள் கட்டிச் செல்வது, கழகத்தை எந்த அளவிலும் பாதிக்காது; கம்யூனிஸ்டுகள் இறுதியில் ஏமாறப்போகிறார்கள் என்பதுமட்டும் உறுதி. ஏனெனில், இதுவரையில் அவர்கள் தி. மு. க. பற்றிக் கொண்ட ஒவ்வொரு தவறான கருத்திலும் ஏமாந்துதான் போயிருக்கிறார்கள்!

ஆனால் தி. மு. க-வோடு ஐக்கியமுன்னணி அமைக்க அவர் தயங்கமாட்டாராம். அப்படி ஐக்கியமுன்னணி அமையும்போது, தி. மு. க வின் அடிப்படைக் கொள்கைகளை வலியுறுத்தாமல் பார்த்துக்கொள்வாராம். ஆனால் கம்யூனிஸ்டுகள் தாங்கள் அடிப்படைக் கொள்கைகளை ஐக்கிய முன்னணியிலும் வற்புறுத்துவார்கள்; அவைகளை எல்லோரும் பொறுத்துக்கொண்டு ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பது அவர் எண்ணம். மற்றவர் சொல்வதைத் தாம் ஏற்றுக்கொள்ள மாட்டார்; ஆனால் தாம் சொல்வதை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்! எவ்வளவு அழகானவாதம்!

கம்யூனிஸ்டுகள் திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றி என்ன எண்ணம் கொண்

டிருக்கிறார்கள் என்பதற்கு, இது ஏற்ற சான்றாகும்!

ஃ ஃ ஃ

‘தலைவிதி’ ‘தலைவலி’ ஆகக்கூடாது!

புதிய ஆரம்பக் கல்வித்திட்டத்தை கிராம மக்கள் வெறுக்கிறார்கள், இதற்கு எதிர்ப்பும் பெரும் அளவில் ஏற்பட்டுள்ளது, எனவே இதனைக் கைவிடுவது நல்லது என்ற முறையில் முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமியார் மேல்சபைக் கூட்டத்தில், இந்நாள் முதலமைச்சர் ஆச்சாரியாருக்கு அறிவுரை பகர்ந்தார். அதற்கு விடைகூறவந்த அன்பர் ஆச்சாரியார் “இது என் தலைவிதி. நான் இதில் வெற்றியடையாவிடில், வேறு யாராவது நிச்சயம் வெற்றிபெறுவார்கள். ஆனால் தோந்தரவு கஷ்டம் என்பதற்காக நல்லது செய்வதை விடமுடியுமா? நல்லதை எதிர்ப்புக்காக விடுவதா?” என்று கூறியுள்ளார்.

புதிய கல்வித்திட்டம் நல்லதா? அல்லது கெட்டதா? என்ற பிரச்சினையை எந்த அறிஞர்கள் கூட்டத்தில், அல்லது எந்த ஆசிரியர் கூட்டத்தில், அல்லது எந்த அரசியலறிஞர்கள் கூட்டத்தில், அல்லது எந்த கல்விநிபுணர்கள் கூட்டத்தில் வைத்து முடிவெடுத்தார்? அவரே தான் முன்பு கூறியுள்ளாரே, “யாரைக் கேட்டுக்கொண்டு நான் செய்யவேண்டும்” என்று! எனவே ‘நல்லது’ என்று எண்ணியவரும் அவரேதான்; ‘முடிவு’ செய்தவரும் அவரேதான்; ‘திட்டம்’ தீட்டியவரும் அவரேதான்! இந்த நிலையில் அவர் கேட்கிறார், “நல்லதை எதிர்ப்புக்காக விடுவதா?” “தோந்தரவு, கஷ்டம் என்பதற்காக நல்லது செய்வதை விடமுடியுமா?” என்று. இப்படிப்பட்ட நேரங்களில் ‘ஆச்சாரியார்’ பேசுவதில்லை, அவரது ‘ஆணவம்’ தான் பேசும்!

திட்டம் வெற்றிபெறுவது குறித்த உறுதிப்பாடு ஆச்சாரியாருக்கே இல்லை. எனவேதான் “நான் இதில் வெற்றியடையாவிடில். வேறு யாராவது நிச்சயம் வெற்றிபெறுவார்கள்” என்று குறிப்பிடுகிறார். திட்டம் நல்ல திட்டமாக இருக்குமேயானால், ஆச்சாரியாருக்கு ஐயப்பாடு ஏற்படவேண்டிய இன்றியமையாமை இல்லை. அப்படியே தாம் வெற்றியடையாமற் போவதற்குக் காரணம் என்ன, “வேறு யாராவது” வெற்றியடையக் கூடுவதற்கான காரணம் என்ன என்பனவற்றிற்காவது விளக்கம் உண்டா? இல்லை!

திட்டத்தினால் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டுத், தொந்தரவும் கஷ்டமும் தமக்கு ஏற்படுவது. “தலைவிதி” என்கிறார். ஆச்சாரியாருடைய ‘தலைவிதி’, நாட்டுமக்களனைவரின் ‘தலைவலி’யாக மாறக்கூடாது என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கம். ஆகவேதான் பெரும் போராட்டத்தில் இறங்கியிருக்கிறது.

ஃ ஃ ஃ

குலத்தொழில் கல்வியே

முதலமைச்சர் ஆச்சாரியார், குலமுறையில், உயர்ந்த படிக்கட்டில் உட்கார்ந்திருக்கும் உணர்வு அவரது உள்ளத்தில் ஊறிக்கொண்டிருப்பதால். ஏனையோர் குலத்தொழிலைக் கற்றுக்கொண்டு, அதிலேயே என்றென்றும் அழுந்திக்கிடந்தால், தாமும், தம் இனத்தாரும், உல்லாசவாழ்வில் உலாவித்திரியலாம் என்ற நோக்கத்தோடுதான் புதிய ஆரம்பக்கல்வித் திட்டத்தைப் புகுத்தினார்—என்பதைக் கழகத்தார் சுட்டிக்காட்டுகிறார்கள். குலத்தொழில் கல்வி முறையையே தாம் கொண்டுவருவதாக, ஆச்சாரியார், திருவான்மியூர் கூட்டத்தில் வெளியிட்டார். நாம் இதனைக் குறிப்பிட்டுப் பேசும்போது, சில கருத்துக்குருடர்கள், ஆச்சாரியார் அப்படிச் சொல்லவே இல்லை, குலத்தொழில் முறை என்பதல்ல அவரது நோக்கம் என்று வாதிட்டு நிற்கின்றனர். அத்தகையோர்க்கு அறிவுபுகட்டும் வண்ணம், ஆச்சாரியாரின் ‘சிறியதிருவடி’யான நிதி—கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் சட்டசபையில், கல்விப் பிரிவு நிதிகோரிக்கை விவாதத்திற்குப் பதில் கூறும்போது, “அவரவர் குலத்தொழிலைக் கற்கவேண்டுமென்று முதல் மந்திரி ஒருசமயம் கூறியதால் இத்திட்டத்திற்குப் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டதாக நான் நினைககிறேன். பாம்பரைக் குலத்தொழிலைக் கற்பது தவறா? அதில் என்ன ஈனம் என்று நான் கேட்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

குலத்தொழில் கல்விமுறையைத்தான் ஆச்சாரியார் வற்புறுத்தினார் என்பதும், அதற்குச்

சிறிய திருவடியார் 'வக்காலத்து' வாங்கிப் பேசுகிறார் என்பதும் இதிலிருந்து தெளிவுற விளங்கும்.

"பரம்பரைக் குலத்தொழிலைக் கற்பது தவறா? அதில் என்ன ஈனம் இருக்கிறது?" என்று கேட்கிறார் கல்வி அமைச்சர்! தோட்டி, தொம்மை, பள்ளு, பறை, சக்கிலி, சாணார், வண்ணார், நாவிதர் என்று வைதீகர்கள் பிரித்து வைத்துக் காப்பாற்றிவரும் குலங்களில் பிறந்து, அக்குலங்களின் காரணமாக இழைக்கப்பட்டு வரும் கொடுமைகளையும் இழிவுகளையும் ஏற்றுக் கொள்ளாத வரையில், தோழர் சுப்பிரமணியம் அவர்களுக்குக் குலத்தொழில் தவறாகவோ அல்லது ஈனமாகவோ எப்படிப்படும்? ஆச்சாரியாரும், அவரது சிறிய திருவடியாரும் குல இழிவும், குலக்கொடுமையும் அண்டாத வகையில் வைதீகர்களால் வைக்கப்பட்டவர்களாயிற்றே! குலத்தொழில் முறை அவர்களைப் பாதிக்காதல்லவா! எனவேதான் குலத்தொழில் முறை நண்பர் சுப்புரமணியம் அவர்களுக்குத் தவறாகவோ, ஈனமாகவோ படவில்லை.

ஆனால் ஆச்சாரியார், சுப்பிரமணியம் ஆகியோரின் உள்ளக்கிடக்கை என்ன என்பது இக் கூற்றால் நன்கு தெளிவாகிறது.

ஃ ஃ ஃ

மன்னிப்புக் கோருகிறார்

சென்னைக் கல்வி அமைச்சர் சுப்பிரமணியம், சென்னை சட்டமன்றத்தில், புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்திற்கு ஆதரவு தேடிப் பேசும்போது, "திட்டம் பூராவும் திருப்திகரமாகச் சரியாக இருக்கிறதென்று நான் சொல்லத் தயாராயில்லை," என்று கூறியுள்ளார். ஆனால் இவ்வளவு நாட்களாயிற்று, சுப்பிரமணியம் போன்ற மதியூக மந்திரிகளுக்குத் தெளிவு ஏற்பட! சிற்சில குறைபாடுகள் இருப்பதாக இப்பொழுது உணருகிறார். ஆனால் சிறிது காலந்தானே ஆயிற்றுத் திட்டம் நடைமுறைக்கு வந்து! இன்னும் சிலநாட்கள் சென்றால் திட்டத்தில் பற்பல குறைபாடுகள் இருப்பது அவருக்குத் தெளிவுபடும்! அதற்கும் சில நாட்கள் கழித்துத் திட்டம் பூரவுமே குறைபாடுடையது என்று உணர்வார்! அந்தக் காலம் விரைவில் வரட்டுமாக!

அவர் மேலும் பேசும்போது, "சட்டசபையைக் கலந்துகொண்டு திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரவில்லை. அங்கத்தினர்களைக் கேட்கவில்லை என்று குறை சொல்லப்படுகிறது. இது திட்டத்தைப் பற்றிய குறை இல்லை. இது குறை என்றால் எங்களை மன்னித்துவிடுங்கள்" என்று சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்துக் கேட்கிறார்.

அங்கத்தினர்களைக் கேட்டுக்கொண்டு செய்யவில்லை என்பது மட்டுமே குறை என்று நினைத்துக்கொண்டு, அந்த அளவுக்கு மன்னிப்புக் கோரிவிட்டால் பிரச்சினை தீர்ந்துவிட்டது என்று கருதுகிறார் நிதி அமைச்சர். குறை இந்த ஒன்றுமட்டுமாகவே இருந்திருந்தால், அவர் இந்த ஒரு மன்னிப்போடு வெற்றிபெறறவராவார். ஆனால், குறை ஒன்றுமட்டுமல்ல, பல இருக்கின்றன. ஆகவே நிதி அமைச்சர் கேட்க வேண்டிய மன்னிப்புகள் இன்னும் பல இருக்கின்றன. "திட்டத்தைத் தெரியாமல் கொண்டுவந்துவிட்டோம், எடுத்துவிடுகிறோம். மன்னித்துவிடுங்கள்" என்பது, அவரது கடைசி மன்னிப்பாக இத்திட்டத்தைப் பொறுத்து இருக்கும் என்று கருதுகிறோம்.

ஃ ஃ ஃ

சாதிப்பற்று அற்றுப்போகவில்லை

அன்பர் ஆச்சாரியாருக்குச் சாதிப்பற்று அறவே கிடையாது என்றும், சாதிப்பற்றிய உணர்வு அவர் உள்ளத்திலிருந்து அற்றுப் போய்விட்டதென்றும், அவர் சாதிமதங்களையெல்லாம் கடந்து அப்பால் நிற்பவர் என்றும், அவருடைய தொண்டரடிப்பொடி ஆழ்வார்கள், அவரைப்பற்றி அடிக்கடி 'அர்ச்சனை' புரிந்து வருகின்றனர். ஆனால் ஆச்சாரியார் தாம் சாதியுணர்வினின்றும் அகலவில்லை என்பதைத் தான், அவரது பேச்சும், நடவடிக்கைகளும் தெளிவுறக் காட்டுகின்றன.

சென்ற ஆண்டுச், சென்னைத் தேனாம்பேட்டையில், தமிழ்விழா மாநாடு நடந்தபோது, அதனைத் திறந்துவைக்கும் பணியினை ஏற்றுக் கொண்ட ஆச்சாரியார், "என்னை ஏன் இந்த மாநாட்டைத் திறந்துவைக்கும்படி அழைத்தார்கள் என்று தெரியவில்லை. இந்த நாட்டின் பழைய சம்பிரதாயமுறைப்படி, திருக்குலத்தானை அழைத்துத்தான் எந்தக் காரியத்தையும்

துவக்குவார்கள். அதை ஒட்டித்தான், என்னை இந்த மாநாட்டைத் துவக்கும்படிப் பணித்தார்கள் என்று நினைக்கிறேன்" என்று கூறினார் தாம் ஒரு 'திருக்குலத்தான்' என்ற உணர்வு அவர் உள்ளத்தைவிட்டு அகலவில்லை என்பது இக்கூற்றிலிருந்து நன்கு தெரிகிறது.

அண்மையில் ஆந்திர வர்த்தக சபையின் வெள்ளி விழாக் கூட்டத்தில், டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களோடு கலந்து கொண்டு, பேசும்போது, ஆச்சாரியார் "நானும் ஸ்ரீ இராதாகிருஷ்ணனுடன் சேர்ந்து இந்தச் சங்கத்துக்கு ஆசி கூறுகிறோம். நாங்கள் பிராமணர்களாயிருந்தாலும் ஆசி கூறுகிறோம்" என்று குறிப்பிட்டுள்ளார். "நாங்கள் பிராமணர்களாயிருந்தாலும்" என்று குறிப்பிடுவதால், ஆச்சாரியர் தாம் ஒரு 'பிராமணர்' என்பதை மறக்கவில்லை என்பதும், பிராமணர்களுக்கு ஆசி கூறுவதில் இப்பொழுது அவ்வளவு செல்வாக்கு இல்லை, இருந்தாலும் கூறுகிறோம் என்ற முறையில், பிராமணர் செல்வாக்கு அழிந்துவருவதை உணருகிறார் என்பதும் பெறப்படும்.

ஆச்சாரியார், தாம் ஒரு 'பிராமணர்' என்ற உணர்வினின்றும் அகலவில்லை என்பது, மேலும் தொடர்ந்து அவர் கூறும் சொற்கள் இனிது தெளிவுபடுத்தும். "டாக்டர் பட்டாபி தாம் அனுப்பியுள்ள ஆசிச் செய்தியில், பிராமணர்களின் ஆசீர்வாதம் உங்கள் வர்த்தக சபைக்குத் தேவையில்லை என்று கூறியிருக்கிறார். நான் அதை ஒப்புக்கொள்ளவில்லை. வர்த்தக சபைகளுக்கு பிராமணர்கள், க்ஷத்திரியர்கள் மற்றும் எல்லோருடைய ஆசீர்வாதமும் அவசியம்". இவைகளே ஆச்சாரியாரின் பொன்மொழிகள்!

பிராமணர் வீடுகளில், வீட்டுக்கு ஒருவராவது, வேதம் ஓதவேண்டும், குல ஆசாரத்தை விட்டுவிடக்கூடாது என்று முன்பு ஒருமுறை அவர் பிராமணர்களுக்கு உபதேசித்தது, அவருக்குள்ள சாதிப்பற்று எவ்வளவு என்பதைத் தெளிவுபடக் காட்டும்.

நிலைமை இவ்வாறு இருந்தும், ஆச்சாரியாருக்குச் சாதிப்பற்று, சாதி உணர்வு இல்லை என்று சாதிப்பது, முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதற்கே ஒப்பாகும்!

தூத்துக்குடி வழக்கு நிதி

தேவையான தொகை ரூ. 20000

இதுவரை சேர்ந்துள்ளது ரூ. 12000

சதிவழக்கில் சிக்கியுள்ள

96 கழகத் தோழர்களை மீட்க

இன்னும் 8 ஆயிரம் தேவை

கழகத்தில் பற்றுடையோர்—கொள்கையில் ஆர்வமுடையோர்
செயலில் வீரமுடையோர்

உடனே

நிதிபாக்கியை நிரப்புங்கள்

அ. பொன்னம்பலனார், 24, சூரியநாராயணச் செட்டித் தெரு, இராயபுரம், சென்னை.

மஞ்ஞை மடக்கிய மடக்கொடி

[இரா. நெடுஞ்செழியன்]

வெளியே உலாவச் சென்ற தலைவன், நீண்ட பொழுதாகியும், இல்லம் திரும்பவில்லை, தலைவி தன்னந்தனியே வீட்டில் காத்திருக்கிறாள். காதலன் வரவைக் காணாத அவள், வழிமேல் விழிவைத்துப் பார்த்தபடியே இருக்கிறாள். நாழி ஆக ஆக அவள் ஏங்குகிறாள். எங்கு சென்றிருப்பானோ, என்ன கேடு வந்துற்றதோ என்று பலவாறாக எண்ணி வருந்துகிறாள்.

சிறிது நேரங்கழித்து அவளுக்கு ஒரு சிந்தனை பிறக்கிறது. தலைவனோடு, அவனது நண்பனான பண்புகெட்ட பாணன் சென்றிருப்பதால், ஒருக்கால் அவன் தன் கணவனைப் பரத்தையர் இல்லத்திற்கு அழைத்துச் சென்றிருப்பானோ என்று எண்ணமிடுகிறாள். எப்படிச் சிந்தித்துப் பார்த்தாலும் வேறு நிலைமை எதுவும் அவள் உள்ளத்தில் படவில்லை; இந்தக் கருத்தே உறுதியாகப் படிந்துவிடுகிறது. ஏக்கமும், வருத்தமும் இப்பொழுது அவளுக்குத் துக்கமாகவும், சினமாகவும் மாறிவிடுகின்றன. காதலன் வரவை வெறுப்போடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள்; ஆனால் வெறுப்பை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல், அவனை வரவேற்று, உண்மையை அவனிடமிருந்தே அறிந்துகொள்ள வேண்டும் என்று தன்னைத் தானே உறுதிப்படுத்திக்கொள்கிறாள்.

தலைவன் விரைவாக வந்து வீடுஏறி, உள்ளே நுழைகிறான். தலைவி எதிர்நடந்து செல்லுகிறாள். தலைவனைத் தடுத்து நிறுத்திக்கொள்ளுகிறாள். அவன்மீது கொண்டுள்ள சினத்தை அடக்கிக்கொள்ள வேண்டும் என்று அவள் நினைத்தாலும், அவனைக் கண்டதும் சினம் பொங்கி எழுகிறது. அவனையே உற்று கவனிக்கிறாள். அவனது வேட்டி, மடிப்பெல்லாம் கலைந்து, கசங்கி, நலங்கிக் காணப்படுகிறது; அவன் தோள்மீது கிடக்கும் பூமாலை, நிறங் குறைந்து, வாடி வதங்கித் தென்படுகின்றது; அவன் மார்பில் பூசிய சந்தனம் வேர்வையால் நனைந்திருக்கிறது. தலைவி, தான் முதலில் ஊகித்துக்கொண்டது உண்மைதான் என்று உணர்ந்துகொள்கிறாள். அவனது அழகான மார்பை அன்போடும், ஆத்திரத்தோடும் பார்த்துக்கொண்டு அசைவற்று நிற்கிறாள்.

“ஏன் என்னை உற்றுப் பார்க்கிறாய்?....”

“இல்லை, உன்னுடைய உயர்ந்த அழகான மார்பைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்!....”

“இதில் வியப்புக்கு என்ன இருக்கிறது?...”

“வியப்பதற்கு ஒன்றுமில்லை; ஆனால் வினவுதற்கு இருக்கிறது!”

“அப்படி என்ன இருக்கிறது?”

“ஒன்றுமில்லையா?....”

“என்ன இருக்கிறது?”

“மடி கலைந்த வேட்டி, நிறம் குலைந்த மாலை, வேர்வை நனைந்த சந்தனம் இவைகள் இருக்கின்றனவே, போதாதா?”

“இவைகள் இருந்தால்....”

“இவைகள் உனது தன்மை என்ன என்பதை

விளக்குகின்றன. அதனால்தான் உன்னை வினவ வேண்டியிருக்கிறது!"

"என்ன வினவவேண்டியிருக்கிறது?"

"என்னவா?...நீ எவ்விடத்துக்குச் சென்றிருந்தாய்; ஏன் இப்பொழுது இவ்விடத்திற்கு வந்திருக்கிறாய்?...."

தலைவி இப்படிக் கேட்பதைக் கேட்டதும், தலைவன், தன்னுடைய தன்மையை மறைத்துக் காட்டவேண்டி, விழுந்துவிழுந்து சிரித்துக் காட்டுகிறான். புன்முறுவல் பூத்தவண்ணம் அவளுடைய நீலப்பூவை ஒத்த கண்களை உற்றுக் கவனிக்கிறான். பிறகு சிரித்துகொண்டே அவளிடம் கூறுகிறான். "அதைப்பற்றியா கேட்கிறாய்?....இப்பொழுதே அதனைக் கூறிவிடட்டுமா? நீ கேட்டுக்கொள்கிறாயா?.......நான் குதிரை சவாரிசெய்துவிட்டு வருகிறேன்; அதனால்தான் இந்தக் கோலமெல்லாம்!"

"ஓ! நீ குதிரை சவாரியா செய்துவிட்டு வருகிறாய்?....இப்பொழுது தெரிந்துகொண்டேன் நீ எந்தக்குதிரை சவாரி செய்துவிட்டு வருகிறாய் என்பதை!" என்று தலைமகள் கேலிக் குரலில் கூறுகிறாள்.

அதுகேட்ட தலைவன், "என்ன தெரிந்து கொண்டாய்?...." என்று சற்று அச்சத் தோடும் அதிசயத்தோடும் கேட்கிறான்.

"தெரிந்துகொண்டதைக் கூறுகிறேன், கேள்! நீ ஏறிய குதிரை, ஐந்துவகையாகப் பிரித்துப் பின்னப்பட்ட கூந்தலாகிய பிடரி மயிரினையுடையது; அது பலதடவை கத்தரித்து விடப்பட்ட மயிர்போலவே விளங்கும்; நீ ஏறிய குதிரை, மயிர் முடியின்மேல் விரித்துப் பொருத்திவைத்த சிவப்புக் குஞ்சமாகிய சிவந்த தலையாட்டத்தினையுடையது; நீ ஏறிய குதிரை, நீல மணியைத் தோலிலே வைத்துத் தைத்துச் செய்த கழுத்தணியாகிய கழுத்திற் கட்டுதலையுடைய கட்டுவடத்தினையுடையது; நீ ஏறிய குதிரை, மெல்லிய காதிற் கிடக்கும் கன்னப்பூ என்னும் காதணியாகிய, கீழேதொங்கும் இயல்பையுடைய கன்ன சாமரையினை (காதுக்குஞ்சம்) யுடையது; நீ ஏறிய குதிரை; தெய்வவுத்தி என்னும் தலை நகையருகே துவக்கி ஒருவடமாய்த்தொங்கும் சுட்டியாகிய, குதிரை கண்ணுற்றுக்கண்டு அஞ்சும்படியாக விட்டு வைத்த அழகான சாட்டையினையுடையது; நீ ஏறிய குதிரை, நூலாற்செய்யப்பட்ட கழுத்தணியாகிய, திண்ணிய கடிவாளத்தை யுடையது; நீ ஏறிய குதிரை, சீரான மணிகளால் செய்த மூன்று சரங்களால் ஆன கழுத்தணியாகிய, பலப்பல நிறத்தையுடைய கண்டிகையினை யுடையது; நீ ஏறிய குதிரை, பொன்னாற் செய்த மேகலையாகிய (ஒட்டியாணம்), கழுத்திலே கட்டின சதங்கை தன்னையுடையது; நீ ஏறிய குதிரை, காலிலே அழகுற கட்டிய பொன்னாற்செய்த சதங்கையாகிய, காற் சதங்கையையுடையது; நீ ஏறிய குதிரை, காலிலே போடப்பட்ட சிலம்பாகிய, கால் கெச்சையினையுடையது!" என்று தலைவி கேலியாகச் சொல்லிக்கொண்டே போகிறாள்.

தலைவி தன்னைக் கேலிசெய்கிறாள் என்பதை அறிந்துகொண்ட தலைவன், குற்றம் தன்னிடத்து இருக்கும் காரணத்தால் ஏதும் சொல்லமுடியாதவனாய், "என்ன உளறிக் கொண்டே போகிறாய்?...." என்று சற்றுக் கடுகடுத்துக் கேட்கிறான்.

"உளறவில்லை! உண்மையைத்தான் உரைத்திடுகிறேன். நீ காதலித்து ஏறிய குதிரையை, வெட்டவெளியில் செலுத்தமுடியாது என்று கருதி, நறுமணம் கமழும் மாளிகையின் அழகான நிலா முற்றத்திலே, அதன் காலிற்கட்டின சிலம்பும் கெச்சையும் ஆரவாரிப்ப, குறுக்க நெடுக்காகச் செலுத்தினாய் போலும்! அதனால்தான் இவ்வளவு இளைத்திருக்கிறாய்! நீ இனிமேல் அரசர்களில் சிறந்தவனாக ஆகவேண்டியவன்! எனவே நீ நெடிது வாழ்வாயாக!...." என்று சொல்லிக் கேலியாக வாழ்த்துகிறாள்.

"என்னை நீ தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறாய். நீ நினைக்கிறபடி நான் ஒரு குற்றமும் செய்யவில்லை!" என்று அமைதியாகக் கூறுகிறான் தலைவன்.

"ஐயோ, பாவம்! ஒரு குற்றமும் செய்யவில்லை! கிழக்கே ஞாயிறு தோன்றி, அதன் வெய்யல் எரிக்கத்தொடங்கும் விடியற்காலத்தில், குப்பையை நீண்ட விளக்குமாறுகொண்டு கூட்டுவதால், மதுரையின் தெருக்களில் எப்படிக் கீறல்கள் காணப்படுமோ, அப்படி உன் உடலின் கண் கீறியிருப்பது, குதிரைதானா?" என்று அழுத்தந் திருத்தமாகத் தலைவி கேட்கிறாள். தலைவன் தோளில், பரத்தையின் கை விரலால் கீறப்பட்ட கீறல்களைச் சுட்டிக்காட்டி,

விளக்குகின்றன. அதனால்தான் உன்னை வினாவ வேண்டியிருக்கிறது!"

"என்ன வினாவவேண்டியிருக்கிறது?"

"என்னவா?...நீ எவ்விடத்துக்குச் சென்றிருந்தாய்; ஏன் இப்பொழுது இவ்விடத்திற்கு வந்திருக்கிறாய்?...."

தலைவி இப்படிக் கேட்பதைக் கேட்டதும், தலைவன், தன்னுடைய தன்மையை மறைத்துக் காட்டவேண்டி, விழுந்துவிழுந்து சிரித்துக் காட்டுகிறான். புன்முறுவல் பூத்தவண்ணம் அவளுடைய நீலப்பூவை ஒத்த கண்களை உற்றுக் கவனிக்கிறான். பிறகு சிரித்துகொண்டே அவளிடம் கூறுகிறான், "அதைப்பற்றியா கேட்கிறாய்?....இப்பொழுதே அதனைக் கூறிவிடட்டுமா? நீ கேட்டுக்கொள்கிறாயா?.......நான் குதிரை சவாரிசெய்துவிட்டு வருகிறேன்; அதனால்தான் இந்தக் கோலமெல்லாம்!"

"ஓ! நீ குதிரை சவாரியா செய்துவிட்டு வருகிறாய்?....இப்பொழுது தெரிந்துகொண்டேன் நீ எந்தக்குதிரை சவாரி செய்துவிட்டு வருகிறாய் என்பதை!" என்று தலைமகள் கேலிக் குரலில் கூறுகிறாள்.

அதுகேட்ட தலைவன், "என்ன தெரிந்துகொண்டாய்?...." என்று சற்று அச்சத்தோடும் அதிசயத்தோடும் கேட்கிறான்.

"தெரிந்துகொண்டதைக் கூறுகிறேன், கேள்! நீ ஏறிய குதிரை, ஐந்துவகையாகப் பிரித்துப் பின்னப்பட்ட கூந்தலாகிய பிடரிமயிரினையுடையது; அது பலதடவை கத்தரித்து விடப்பட்ட மயிர்போலவே விளங்கும்; நீ ஏறிய குதிரை, மயிர் முடியின்மேல் விரித்துப் பொறுத்திவைத்த சிவப்புக் குஞ்சமாகிய சிவந்த தலையாட்டத்தினையுடையது; நீ ஏறிய குதிரை, நீல மணியைத் தோலிலே வைத்துத் தைத்துச் செய்த கழுத்தணியாகிய கழுத்திற் கட்டுதலையுடைய கட்டுவடத்தினையுடையது; நீ ஏறிய குதிரை, மெல்லிய காதிற் கிடக்கும் கன்னப்பூ என்னும் காதணியாகிய, கீழேதொங்கும் இயல்பையுடைய கன்ன சாமரையினை (காதுக்குஞ்சம்) யுடையது; நீ ஏறிய குதிரை; தெய்வவுத்தி என்னும் தலை நகையருகே துவக்கி ஒரு வடமாய்த்தொங்கும் சுட்டியாகிய, குதிரை கண்ணாற்கண்டு அஞ்சும்படியாக விட்டு வைத்த அழகான சாட்டையினையுடையது; நீ ஏறிய குதிரை, நூலாற்செய்யப்பட்ட கழுத்தணியாகிய, திண்ணிய கடிவாளத்தை யுடையது; நீ ஏறிய குதிரை, சீரான மணிகளால் செய்த மூன்று சரங்களால் ஆன கழுத்தணியாகிய, பலப்பல நிறக்கையுடைய கண்டிகையினையுடையது; நீ ஏறிய குதிரை, பொன்னாற் செய்த மேகலையாகிய (ஒட்டியாணம்), கழுத்திலே கட்டின சதங்கை தன்மையினையுடையது; நீ ஏறிய குதிரை, காலிலே அழகுற கட்டிய பொன்னாற்செய்த சதங்கையாகிய, காற் சதங்கையையுடையது; நீ ஏறிய குதிரை, காலிலே போடப்பட்ட சிலம்பாகிய, கால் கெச்சையினையுடையது!" என்று தலைவி கேலியாகச் சொல்லிக்கொண்டே போகிறாள்.

தலைவி தன்னைக் கேலிசெய்கிறாள் என்பதை அறிந்துகொண்ட தலைவன், குற்றம் தன்னிடத்து இருக்கும் காரணத்தால் ஏதும் சொல்லமுடியாதவனாய், "என்ன உளறிக்கொண்டே போகிறாய்?...." என்று சற்றுக் கடுகடுத்துக் கேட்கிறான்.

"உளறவில்லை! உண்மையைத்தான் உரைத்திடுகிறேன். நீ காதலித்து ஏறிய குதிரையை, வெட்டவெளியில் செலுத்தமுடியாது என்று கருதி, நறுமணம் கமழும் மாளிகையின் அழகான நிலா முற்றத்திலே, அதன் காலிற்கட்டின சிலம்பும் கெச்சையும் ஆரவாரிப்ப, குறுக்க நெடுக்காகச் செலுத்தினாய்ப் போலும்! அதனால்தான் இவ்வளவு இளைத்திருக்கிறாய்! நீ இனிமேல் அரசர்களில் சிறந்தவனாக ஆகவேண்டியவன்! எனவே நீ நெடிது வாழ்வாயாக!...." என்று சொல்லிக் கேலியாக வாழ்த்துகிறாள்.

"என்னை நீ தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறாய். நீ நினைக்கிறபடி நான் ஒரு குற்றமும் செய்யவில்லை!" என்று அமைதியாகக் கூறுகிறான் தலைவன்.

"ஐயோ, பாவம்! ஒரு குற்றமும் செய்யவில்லை! கிழக்கே ஞாயிறு தோன்றி, அதன் வெய்யல் எரிக்கத்தொடங்கும் விடியற்காலத்தில், குப்பையை நீண்ட விளக்குமாறுகொண்டு கூட்டுவதால், மதுரையின் தெருக்களில் எப்படிக் கீறல்கள் காணப்படுமோ, அப்படி உன் உடலின் கண் கீறியிருப்பது, குதிரைதானா?" என்று அழுத்தந் திருத்தமாகத் தலைவி கேட்கிறாள். தலைவன் தோளில், பரத்தையின் கை விரலால் கீறப்பட்ட கீறல்களைச் சுட்டிக்காட்டி,

அரசியலும் சமூகமும்

நீர் நிலவளம்

பழம்பெரும் நாகரிகம் உடையனவாய், வளமும் வனப்பும் கொழித்தனவாய், அறிவும் ஆற்றலும் மிக்கனவாய், மக்களின் பெருக்கும் செல்வச் செழிப்பும் சிறந்தனவாய் வளர்ந்தோங்கி வாழ்ந்த நாடுகளிலே, எழில்மிகுந்த எகிப்து, சிறப்புடைய ஒன்றாகும். அதன் நீர் வளமும், நிலவளமும், நாகரிக வளர்ச்சிக்கு முக்கிய காரணங்களாக இருந்தன. எங்கு வளமிக்க நிலப்பரப்புகளை இருமருங்கும்கொண்டு, வற்றாத ஆறுகள் சலசலவென ஓடிக்கொண்டிருந்தனவோ, அங்கெல்லாம் மக்கள் குடியேறவும், வாழவும், வளரவும், நாகரிகத்தை வளர்க்கவும் காரணமானார்கள். எகிப்தில் ஓடும் நைல் நதி, தன் நீரை இருமருங்கும் வாரி இறைத்துக், காடுகளையும் கழனிகளையும், தோட்டங்களையும் துறவுகளையும், பயிர்களையும் பச்சைகளையும் கொழிக்கச்செய்வதால், இயற்கை நலம் அங்கு என்றும் கொஞ்சிக்குலாவுகிறது. நைல்நதியால், எகிப்து வளமுறும் காரணத்தால்தான், அதனை, "நைலின்நன்கொடை" என்று உலகோர் அழைக்கின்றனர். எகிப்து, கரிசல்மண் நிறைந்த நாடாதலால், அது, கருநாடு என்று பொருள்படும் கெமி என்ற சொல்லால் பழங்காலத்தில் அழைக்கப்பட்டது.

விளைபொருள்

எகிப்து, பழம்பெருங்காலந்தொட்டே, நெல், சோளம் போன்ற பயிர்மணிகளை உற்பத்தியாக்கிப் போர் போராகக் குவித்துவந்தது. அது உணவின் களஞ்சியமாக விளங்கியதால், அண்டை நாடுகளில் பஞ்சம் ஏற்படும்போதெல்லாம், அந்நாடுகளுக்கு உயிர்ப்பிச்சைதரும் கொடையாளியாக என்றும் காட்சியளித்தது. பேரீச்சை அங்கு ஏராளமாக விளைந்தது. நைல் நதியின் பள்ளத்தாக்கு கிழக்கும்மேற்கும் விரிந்து, தெற்கு வடக்காகச் சுமார் 500 மைல் நீட்ட அளவுக்குப் பரந்துகிடந்தது. எகிப்தின் உணவுவளம் அண்டைநாடுகளின் கண்ணையும் கருத்தையும் அந்தநாட்களில் எப்பொழுதும் உறுத்திக்கொண்டேயிருந்தது!

பிரிவுகள்

பழங்காலத்தில் எகிப்து மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மேல் எகிப்து, இடை எகிப்து, கீழ் எகிப்து என்பன அப்பிரிவுகளாகும். மேல் எகிப்து என்பது இப்பொழுதுள்ள எகிப்தின் தெற்குப்பகுதியாகும். அப்பொழுது அதன் தலைநகர் தீபெஸ் என்பது. அது இருபத்திமூன்று மைல் சுற்றளவுகொண்டதும், நூறு வாயில்களைக் கொண்டதுமான கோட்டைச் சுவரைக் கொண்டிருந்தது. இந்தக் கோட்டைச் சுவருக்குள் தலைநகரைத் தவிர பல சிற்றூர்களும் பேரூர்களும் இருந்தன. இடிந்தும் பாழ்பட்டும் போனகோயில்கள், சிற்பங்கள், பெருஞ்சிலைகள், சதுரக்கம்பங்கள், ஸ்பிங்ஸ்கள் ஆகியவைகள் அவ்விடத்தின் பெருமையை இன்னமும் விளக்கிக்கொண்டிருக்கின்றன. தீபெஸுக்குப் பக்கத்தில் இரண்டு பெரிய உருவச்சிலைகள், அழிந்ததோற்றத்தில், உட்கார்ந்திருக்கின்றன. அவைகள் நாற்பத்தேழு அடி உயரமுள்ளனவாய்ப், பன்னிரண்டு அடி உயரமுள்ள அடித்தளத்தில் அமர்த்தப்பட்டிருக்கின்றன. அவை தீபெஸை ஆண்ட ஒரு அரசன் அரசியர் உருவச்சிலைகள் என்று சொல்லப்படுகின்றன. ஞாயிற்றின் கதிர்கள் அவைகளின்மீது பட்டவுடன், மெல்லிய யாழோசை போன்றதொரு இனிய ஓசை எழும்புகிறதாம். அவைகள் கட்டப்பட்டு மூவாயிரம் ஆண்டுகள் ஆயிருக்கக்கூடும் என்று ஊகிக்கப்படுகிறது. ஆரம்பத்தில் அவற்றைப்போன்று மொத்தம் பதினெட்டு சிலைகள் இருந்தனவென்றும், காம்பிஸேஸ் என்பான் அவற்றின் பெரும்பாலானவற்றை உடைத்து, அவைகளிலிருந்த பொன்னையும் மணியையும் பொருளையும் எடுத்துக் கொண்டு போய்விட்டான் என்றும் வரலாற்றுக் குறிப்புகளால் அறியப்படுகின்றன.

இடை எகிப்து, தீபெஸை அடுத்து, நைல்

அரசியலும் சமூகமும்

நீர் நிலவளம்

பழம்பெரும் நாகரிகம் உடையனவாய், வளமும் வனப்பும் கொழித்தனவாய், அறிவும் ஆற்றலும் மிக்கனவாய், மக்களின் பெருக்கும் செல்வச் செழிப்பும் சிறந்தனவாய் வளர்ந்தோங்கி வாழ்ந்த நாடுகளிலே, எழில்மிகுந்த எகிப்து, சிறப்புடைய ஒன்றாகும். அதன் நீர் வளமும், நிலவளமும், நாகரிக வளர்ச்சிக்கு முக்கிய காரணங்களாக இருந்தன. எங்கு வளமிக்க நிலப்பரப்புகளை இருமருங்கும்கொண்டு, வற்றாத ஆறுகள் சலசலவென ஓடிக்கொண்டிருந்தனவோ, அங்கெல்லாம் மக்கள் குடியேறவும், வாழவும், வளரவும், நாகரிகத்தை வளர்க்கவும் காரணமானார்கள். எகிப்தில் ஓடும் நைல் நதி, தன் நீரை இருமருங்கும் வாரி இறைத்துக், காடுகளையும் கழனிகளையும், தோட்டங்களையும் துறவுகளையும், பயிர்களையும் பச்சைகளையும் கொழிக்கச்செய்வதால், இயற்கை நலம் அங்கு என்றும் கொஞ்சிக்குலாவுகிறது. நைல்நதியால், எகிப்து வளமுறும்காரணத்தால்தான், அதனை, "நைலின்நன்கொடை" என்று உலகோர் அழைக்கின்றனர். எகிப்து, கரிசல்மண் நிறைந்த நாடாதலால், அது, கருநாடு என்று பொருள்படும் கேமி என்ற சொல்லால் பழங்காலத்தில் அழைக்கப்பட்டது.

விளைபொருள்

எகிப்து, பழம்பெருங்காலந்தொட்டே, நெல், சோளம் போன்ற பயிர்மணிகளை உற்பத்தியாக்கிப் போர் போராகக் குவித்துவந்தது. அது உணவின் களஞ்சியமாக விளங்கியதால், அண்டை நாடுகளில் பஞ்சம் ஏற்படும்போதெல்லாம், அந்நாடுகளுக்கு உயிர்ப்பிச்சைதரும் கொடையாளியாக என்றும் காட்சியளித்தது. பேரீச்சை அங்கு ஏராளமாகவிளைந்தது. நைல் நதியின் பள்ளத்தாக்கு கிழக்கும்மேற்கும் விரிந்து, தெற்கு வடக்காகச் சுமார் 500 மைல் நீட்ட அளவுக்குப் பரந்துகிடந்தது. எகிப்தின் உணவுவளம் அண்டைநாடுகளின் கண்ணையும் கருத்தையும் அந்தநாட்களில் எப்பொழுதும் உறுத்திக்கொண்டேயிருந்தது!

பிரிவுகள்

பழங்காலத்தில் எகிப்து மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மேல் எகிப்து, இடை எகிப்து, கீழ் எகிப்து என்பன அப்பிரிவுகளாகும். மேல் எகிப்து என்பது இப்பொழுதுள்ள எகிப்தின் தெற்குப்பகுதியாகும். அப்பொழுது அதன் தலைநகர் தீபெஸ் என்பது. அது இருபத்திமூன்று மைல் சுற்றளவுகொண்டதும், நூறு வாயில்களைக் கொண்டதுமான கோட்டைச் சுவரைக் கொண்டிருந்தது. இந்தக் கோட்டைச் சுவருக்குள் தலைநகரைத் தவிர பல சிற்றூர்களும் பேரூர்களும் இருந்தன. இடிந்தும் பாழ்பட்டும் போனகோயில்கள், சிற்பங்கள், பெருஞ்சிலைகள், சதுரக்கம்பங்கள், ஸ்பிங்ஸ்கள் ஆகியவைகள் அவ்விடத்தின் பெருமையை இன்னமும் விளக்கிக்கொண்டிருக்கின்றன. தீபெஸுக்குப் பக்கத்தில் இரண்டு பெரிய உருவச்சிலைகள், அழிந்ததோற்றத்தில், உட்கார்ந்திருக்கின்றன. அவைகள் நாற்பத்தேழு அடி உயரமுள்ளனவாய்ப், பன்னிரண்டு அடி உயரமுள்ள அடித்தளத்தில் அமர்த்தப்பட்டிருக்கின்றன. அவை தீபெஸை ஆண்ட ஒரு அரசன் அரசியர் உருவச்சிலைகள் என்று சொல்லப்படுகின்றன. ஞாயிற்றின் கதிர்கள் அவைகளின்மீது பட்டவுடன், மெல்லிய யாழோசை போன்றதொரு இனிய ஓசை எழும்புகிறதாம். அவைகள் கட்டப்பட்டு மூவாயிரம் ஆண்டுகள் ஆயிருக்கக் கூடும் என்று ஊகிக்கப்படுகிறது. ஆரம்பத்தில் அவற்றைப்போன்று மொத்தம் பதினெட்டு சிலைகள் இருந்தனவென்றும், காம்பிஸேஸ் என்பான் அவற்றின் பெரும்பாலானவற்றை உடைத்து, அவைகளிலிருந்த பொன்னையும் மணியையும் பொருளையும் எடுத்துக் கொண்டு போய்விட்டான் என்றும் வரலாற்றுக் குறிப்புகளால் அறியப்படுகின்றன.

இடை எகிப்து, தீபெஸை அடுத்து, நைல்

நதியின் இடைப் பகுதியை உள்ளடக்கியதாய் விளங்கிற்று. மேம்பிஸ் என்பது இதன் தலைநகராய் இருந்தது. பாரோஸ் என்ற மன்னர்கள் இங்கிருந்துதான் ஆட்சி செலுத்திவந்தனர். இந்தப் பகுதியில்தான், உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படும் பிரமிட் கோபுரங்கள், நைல்நதியின் மேற்குக் கரையில், சுமார் எழுபது மைல் நீளத்திற்கு மேல பரந்து கிடக்கின்றன.

நைல் நதி கடலொடு கலக்கும் வண்டல்மண் பகுதி, கீழ் எகிப்து என்று அழைக்கப்பட்டது. இந்தப் பகுதிதான் மிக்க வளப்பம் பொருந்தியது. இங்குதான் மக்கட் கூட்டமும் மிகச் செறிந்திருந்தது. சயிஸ் என்பது இப்பகுதியின் தலைநகரமாக இருந்துவந்தது.

அரசியல் முறை

அரசியலில், பாரோ அல்லது அரசன் எனப்படுபவனே எல்லா உரிமைகளையும் கொண்டிருந்தவனாகக் கருதப்பட்டான். என்றாலும் புரோகிதர்களின் ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட்டவனாகவும், அவர்களுக்கு அடங்கி நடக்க வேண்டியவனாகவும் இருந்துவந்தான். சில காலங்களில் முழுக்க முழுக்கப் புரோகிதர்களின் ஆட்சியின்கீழ் அரசு இருந்துவந்தது. பெண்டிர் அரசிகளாக வரவோ, புரோகிதர்களாக ஆகவோ தடையில்லை. நாடு நோமேஸ் என்ற பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, நோமார்க் என்ற தனித்தனி கவர்னரின் ஆளுகையின்கீழ் வைக்கப்பட்டது.

சமூக அமைப்பு

மக்கள் பல்வேறு பிரிவினராகப் பிரிந்திருந்தனர். பல தொழில்கள் பரம்பரைத் தொழில்களாகவே கருதப்பட்டன. தந்தை தொழிலையே மகன் செய்யவேண்டும் என்ற கட்டாய சாதிமுறை இல்லை. யார் கற்றறிந்த அறிஞர்களாகக் காணப்பட்டார்களோ, அவர்கள், கல்வித்துறையில் ஈடுபட்டனர். தொழிலைப் பொறுத்து வகுப்பு வேற்றுமைகள் காணப்படத்தான் செய்தன. ஆட்டிடையர், மாட்டிடையர், வாத்திடையர் போன்றோர் தனித்தனி வகுப்புகளாகவும், கீழ்த்தரத்தினராகவும் கருதப்பட்டனர். அரசர், புரோகிதர், படைவீரர், கணிதர், ஆசிரியர் போன்றவர்கள் உயர்வகுப்பினராகக் கருதப்பட்டனர். கைத்தொழில்கள் அனைத்தும் உயர்வகுப்பு மக்களால் இழிவு என்று கருதப்பட்டு ஒதுக்கப்பட்டன. சிற்பம் செதுக்குதல், ஓவியந் தீட்டுதல் கூட தாழ்ந்த தொழில்களாகவே எண்ணப்பட்டன. ஏராளமான அடிமைகள் வாழ்ந்தனர்; அவர்கள் பெரும்பாலும் சண்டையில் கைதிகளாகப் பிடித்துக்கொண்டு வரப்பட்டவர்களே.

சமயம்

எகிப்தியர்கள் பலவிதமானக் கற்பனைக் கடவுள்களைவைத்துக் கும்பிட்டுவந்தனர். ஒவ்வொரு பண்புக்கும் ஒவ்வொரு கடவுள் உண்டாக்கப்பட்டு இருந்தது. இவற்றைத் தவிர, வேறு பல சில்லறைக் கடவுள்களும் ஆங்காங்கு வணங்கப்பட்டன. சில விலங்குவகைகள்கூட கடவுள்களாகச் சித்தரிக்கப்பட்டிருந்தன. கொக்கு, கழுகு, நாய், பூனை போன்றவைகள் புனிதக்கடவுள்களாகப் போற்றப்பட்டன. இந்த விலங்குகளை யாரேனும் அறியாமல் கொன்றுவிட்டால்கூட, அவர்கள் கொலைத்தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டனர். கோயில்களில் சில இரகசிய விழாக்களும் கொண்டாடப்படுவதுண்டு; அவைகளில் புரோகிதர்கள் மட்டுமே கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.

வழிபாடு

கடவுள் வழிபாடு செய்யும் மூட முறை பொதுப்படையாகவும், தனிப்படையாகவும் இருந்துவந்தது. பொதுப்படையான வழிபாடு கோயில்களிலும், தனிப்படையான வழிபாடு கல்லறைகளிலும் நடந்தேறிவந்தன. ஒவ்வொரு நகரிலும் ஒவ்வொரு கோயில் இருந்தது. அந்தந்த இடத்தில் எந்தக் கடவுளைச் சிறப்பாகக் கொண்டாடினார்களோ, அந்தந்தக் கடவுளுக்கு மட்டுமே கோயில் எழுப்பப்பட்டது. அந்தந்தக் கோயிலில், அந்தந்தக் கடவுளின் பண்புகளை விளக்கும் பதுமைகள் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கோயிலிலும் ஒவ்வொரு வகைப் பிராணி புனிதப்பிராணியாகக் கொள்ளப்பட்டு, அதன் பதுமையும் வைக்கப்பட்டது. இறந்துபட்டவர்கள், அவர்கள் சென்றடைந்த இடத்தில் நலம்பெறவேண்டி, அவர்களின் கல்லறைகளின்முன்பு, அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தோரால் வழிபாடு செய்யும் பழக்கம் இருந்துவந்தது. விலங்குகளை வெட்டிக், காய்கறிகளைப்படைத்துத், திராட்சை ரஸத்தைவைத்து, வாசனைப் பொருள்களைப் புகைத்துக் கடவுள்களுக்குப் பூசைபோடுவார்கள்.

இறந்தவர்களுக்கு இறுதிச் சடங்குசெய்வது

என்பது, எகிப்தியர்களிடையே, மிகமுக்கிய மானவொரு சமூகவிழாவாக இருந்துவந்தது.

இறுதிச்சடங்கு

ஒருவர் இறந்தபிறகு எழுபத்திரண்டு நாட்கள், துக்கநாட்களாகக்கொண்டாடினர். அந்த எழுபத்திரண்டு நாட்களுக்குள் பிணத்தைப் பாடம் பண்ணும் முறைகள் நடந்தேறும். பிணத்தைக் கம்பளித் துணிகளால், நன்றாகப் பல சுற்றுக்கள் சுற்றிப், பிறகு வாசனைப் பொருள்களாலான பசையால் தடவி, ஒரு மரப்பெட்டியிலேயோ அல்லது ஒரு கற்பெட்டியிலேயோ வைத்துக் கல்லறைக்குத் தூக்கிச் செல்வார்கள். கல்லறையில் வழிபாட்டுச் சடங்குகள் நடந்தேறும். ஏழைகளின் பிணங்கள், உப்புத் தண்ணீரில் ஊறப்போடப்பட்டு, தார் தடவப்பட்டுக், கொதிக்கவைக்கப்பட்டுக் கல்லறைக் குழியில் புதைக்கப்படும். புனிதப் பிராணிகளான காளைமாடுகள், நாய்கள், குரங்குகள், பூனைகள், ஆடுகள் போன்றவைகளும் பாடம் செய்யப்பட்டுத்தான் புதைக்கப்படும். வெள்ளையர்கள் எகிப்தில் புதைபொருள் ஆராய்ச்சி செய்தபோது, சுமார் 40 கோடி பிணங்களைக் கண்டெடுத்தார்களாம். சில பெரும் கல்லறைகளில், ஆயிரக்கணக்கான பிணங்கள் ஒன்றின் மேல் ஒன்றாகப், பெட்டிகள்கூட இல்லாமல், அடுக்கப்பட்டிருந்தனவாம். இங்கிலாந்தில் வயல்களில் உரமாகப் போடுவதற்காக, அவைகளைப் பல கப்பல்களில் ஏற்றிக்கொண்டு சென்றார்களாம். இறுதிச் சடங்குகளை எப்படி நடத்துவது என்பதை விவரிக்கும் நூல் ஒன்று, இன்னமும் நடைமுறையில் இருந்துவருகிறதாம். நீண்ட காலத்திற்குப் பிறகு அப்பிணங்கள் உயிர்ப்பெற்று எழும் என்ற நம்பிக்கையினால், பிணங்களைப் பாடஞ்செய்து பாதுகாக்கும் முறை கையாளப்பட்டு வந்தது. இப்படிப் பாடம்பண்ணப்பட்ட பிணங்களை அடகாக வைத்துக், கடன்வாங்கிக்கொள்ளும் பழக்கமும் நிலவிவந்ததாம். ஒருவன் தன் வாழ்நாளைக்குள் கடனைத் திரும்பிக் கொடுக்காமல் இறந்துவிடுவானேயானால், கடன் கொடுத்தவர்கள் அவனுக்குக் கல்லறை கட்டாமல் தடுத்துவிடுவார்களாம். இப்படியாக ஒருசில குறிப்புகள் மட்டுமே பண்டைக்கால எகிப்தைப்பற்றி அறியக் கிடக்கின்றன.

(தொடரும்)

●●

உழைப்பைக் குறைத்து உதவி செய்ய

இசைப்பெட்டி முதலிய பல வியப்புக்குரிய பொருள்களைக் கண்டுபிடித்த அறிவியல் அறிஞனை தாமஸ் எடிசனை ஒருநாள் சில நண்பர்கள் பார்க்க வந்தனர். தாம் கண்டுபிடித்த பல வியப்புக்குரிய பொருள்களை, அவர்களுக்கு ஒவ்வொன்றாகக் காட்டி, "மனிதனுடைய உழைப்பைக் குறைத்து, மிக்க உதவி செய்யக்கூடியவை இவையெல்லாம்" என்று கூறினாராம்.

வந்தவர்கள் அந்தப் பொருள்களை யெல்லாம் கண்டு வியப்படைந்தார்கள். ஆனால், அவர்களுக்கெல்லாம் ஒன்றுமட்டும் புரியவில்லை. அவர்களிலே ஒருவர் எடிசனைப் பார்த்துக் கேட்டார்: "நீங்கள் சொல்லுவதெல்லாம் சரி, ஆனால், உங்கள் வீட்டு வாயிற்படியிலே ஒரு சுழல் கதவு வைத்திருக்கிறீர்களே, அது ஏன் அவ்வளவு கடினமாக இருக்கிறது? அதைச் சுற்றிவிட்டு உள்ளே வருவதென்றால், மனிதனது உழைப்பையெல்லாம் வாங்கிவிடுகிறதே! அதை மட்டும் ஏன் அவ்வளவு கடுமையாக வைத்திருக்கிறீர்கள்?"

அதற்கு எடிசன், "ஓ! அதுவா? அது ஒரு பொறிக்கதவு. அதை ஒரு தரம் சுற்றினால் அதில் பிணைந்துள்ள விசை, எட்டு காலன் தண்ணீரை, என் வீட்டு மாடியிலுள்ள தொட்டியில் இறைத்துவிடுகிறது" என்று மறுமொழி பகன்றாராம்.

இயற்கைக்கு மீறிய ஒன்று ?

[தமிழாக்கம் : இரா. நெடுஞ்செழியன்]

மதம், எல்லா நாடுகளிலும், எல்லாக் காலங்களிலும் பரப்பப்பட்டது; ஆனால் அது எங்கும், எப்பொழுதும் தோல்வியே அடைந்தது!

மதம், மனிதனை ஒருபொழுதும் அருள் நெஞ்சினனாகச் செய்யவில்லை.

மதவிசாரணைக்குழுவின் கொடுமைகளைச் சற்று சிந்தித்துப்பாருங்கள்!

அடிமை வாழ்வை ஒழிப்பதில், மதம், எந்த அளவுக்குச் சாதனை புரிந்தது?

மதம், லிப்பி—சால்ஸ்பரி—ஆண்டர்சன் வில்லி ஆகியோரின் கொடுமைகளைத் தவிர்க்க எந்த அளவுக்கு வேலை செய்தது?

மதம், அறிவியலுக்கு—ஆராய்ச்சி அறிவுக்கு—சிந்தனைக்கு எப்பொழுதும் எதிரியாகவே இருந்துவந்திருக்கிறது.

மதம், மனிதனை விடுதலையுடையவனாக ஒருபொழுதும் செய்யவில்லை.

மதம் மனிதனை ஒழுக்கமுள்ளவனாகவோ, பண்புள்ளவனாகவோ, உழைக்கும் திறம் படைத்தவனாகவோ, நாணயம் கொண்டவனாகவோ ஒருபொழுதும் செய்யவில்லை.

காட்டுமிராண்டிகளைவிட, கிருத்தவர்கள், மிக்கப் பண்புடையவர்களாகவும், மிக்க நல்ல எண்ணமுடையவர்களாகவும், மிக்க நாணயமுடையவர்களாகவும் ஆகவா ஆக்கப்பட்டிருக்கிறார்கள்?

காட்டுமிராண்டிகளிடையில் கெட்ட பழக்கங்களும், கொடுமைகளும் நிரம்பி இருப்பதற்கு அவர்களுடைய அறியாமையையும், மூடநம்பிக்கையுமே காரணங்களாகும் என்பதை, நாம் அறியமாட்டோமா?

இயற்கையின் ஆற்றலையும், அமைப்பையும், ஒருமைப்பாட்டையும் உணர்ந்தவர்களுக்கு, மதம் பொருளற்ற ஒன்றாகவே படும்.

இயற்கையையோ அல்லது இயற்கைப் பொருள்களின் பண்புகளையோ வழிபாட்டுரையால் நாம் மாற்றிவிட முடியுமா? வழிபடுவதன்மூலம், அலைகளை விரைவுபடுத்தவோ அல்லது அடக்கிவைக்கவோ நம்மால் ஆகுமா? பலியிடுவதன்மூலம் காற்றுகளின் திசையை மாற்றிவிட நம்மால் இயலுமா? மண்டியிடுதல் நமக்குச் சொத்துக்களைச் சேர்த்துத்தருமா? வேண்டுதலைச் செய்வதன்மூலம் நாம் நோயைப் போக்கிக்கொள்ள முடியுமா? சடங்கு நிறைவேற்றுவதன்மூலம் நாம் அறிவைப் பெருக்கிக்கொள்ள இயலுமா? படையல் போடுவதன் மூலம் நன்மையையோ அல்லது மதிப்பையோ நாம் பெற்றுவிடக் கூடுமா?

புற உலகில் காணப்படும் உண்மைகள் எவ்வளவு அழுத்தமானதாகவும், அவசியத்தை ஒட்டி உற்பத்தி ஆக்கப்படுவதாகவும் இருக்கின்றனவோ, அதேபோல், அக உலகில் காணப்படும் உண்மைகளும் இருக்கின்றன அல்லவா? நாம் உடலை எப்படி இயற்கையானதாகக் கருதுகிறோமோ அதே அளவு உள்ளத்தையும் இயற்கையானதாகக் கருதுகிறோம் அல்லவா?

இயற்கை ஒரு ஆண்டையைக் கொண்டிருக்கிறது; இந்த ஆண்டை வழிபாட்டுரையைக் கேட்பார்; இந்த ஆண்டை தண்டிப்பார், வரங் கொடுப்பார்; அவர் புகழ்ச்சியையும், துதிபாடு

தலையும் விரும்புவார்; அவர் ஆண்மையாளரை யும், விதிதலையாளரையும் வெறுப்பார் என்ற கோட்பாட்டின்மீதுதான் மதம் கட்டப்பட் டிருக்கிறது.

மனிதன் மேலுலகிலிருந்து எந்த நன்மையை யாவது பெற்றிருக்கிறானா?

நாம் ஒரு கோட்பாட்டைக் கொண்டிருக் கிறோம் என்றால், அதன் அடிப்படைக்கான உண்மைகளை நாம் கொண்டிருக்கவேண்டும். அதற்கான நான்கு எல்லைகளை நாம் கொண் டிருக்கவேண்டும். அதனை ஊகித்தல், உணர்ச்சி கொள்ளுதல், கற்பனைசெய்தல், மனதிற்படல் ஆகியவைகளைக் கொண்டு நாம் உருவாக்கக் கூடாது. முழுக்கமுழுக்க நல்ல அடிப்படை யைக் கொண்டிருக்கவேண்டும். நாம் அதனைக் கட்ட முற்படுகிறோம் என்றால், நாம் அதன் அடிப்படையிலிருந்தே துவங்கவேண்டும்.

நான் ஒரு கோட்பாட்டைக் கொண்டிருக் கிறேன்; நான் அதற்கான நான்கு எல்லைக் கற்களையும் கொண்டிருக்கிறேன்.

முதல் எல்லைக்கல், பொருள் அல்லது வஸ்து ஆகும்; அதனைச் சிதைக்க முடியாது, அழிக்க முடியாது.

இரண்டாவது எல்லைக்கல், ஆற்றல் ஆகும்; அதனையும் சிதைக்க முடியாது, அழிக்க முடியாது.

மூன்றாவது எல்லைக்கல் பொருளும் ஆற்ற லும் பிரிந்து வாழா என்பதாகும்; ஆற்றலில்லா மல் பொருளெதுவுமில்லை, பொருளில்லாமல் ஆற்றலெதுவுமில்லை.

நான்காவது எல்லைக்கல், எது அழிக்கப்பட முடியாதோ அது உண்டாக்கப்பட முடியாது என்பதாகும்; அதாவது அழிக்க முடியாததை உண்டாக்க முடியாது.

இந்த எல்லைக் கற்கள் உண்மையானவைகள் என்று ஆகுமேயானால், பொருளும் ஆற்றலும் தொடக்கத்திலிருந்து இறுதிவரையில் எல்லை யற்றவைகள் என்பது தானே பெறப்படும்; அவைகளை அதிகப்படுத்தவோ, குறைக்கச் செய்யவோ முடியாது.

இதிலிருந்து பெறப்படுவது, ஒன்றும் இது வரை உண்டாக்கப்படவில்லை, உண்டாக்கப்பட முடியாது என்பதாகும்; படைப்பாளர் என்று ஒருவர் ஒருபொழுதும் இருக்கவில்லை. இருக்க வும் முடியாது என்பதுமாகும்.

இதிலிருந்து பெறப்படுவது என்னவென்றால், பொருள்—ஆற்றல் இவைகளுக்குப்பின்னால் எந்த ஒரு அறிவோ அல்லது எந்த ஒரு அமைப்போ இருக்கமுடியாது என்பதாகும்.

ஆற்றல் இல்லாமல் அறிவு இருக்க வழியில்லை. பொருளில்லாமல் ஆற்றல் இருக்க வழியில்லை. எனவே பொருளுக்குப் பின்னால் எந்த ஒரு அறிவோ அல்லது எந்த ஒரு ஆற்றலோ, எவ்வகையிலும் இருக்க வழியில்லை என்பது தானே பெறப்படுகின்றது.

இயற்கைக்குமீறிய ஒன்று வாழவில்லை, வாழ முடியாது என்பது இதிலிருந்து பெறப்படு கிறது. இந்த நான்கு எல்லைக் கற்களும் உண் மைகள்தாம் என்றால், இயற்கைக்கு ஆண்டை என்று ஒருவர் இருக்கமுடியாது. பொருளும் ஆற்றலும், தோற்றம் இறுதியற்றனவாக எல்லை யற்றனவாக இருக்கின்றனவென்றால், கடவுள் என்று ஒருவர் இருக்கவில்லை; கடவுள் அண் டத்தைப் படைக்கவோ, ஆட்சிபுரியவோ செய்யவில்லை; வழிபாட்டுரைக்குப் பதிலுரைக் கும் கடவுள் இருக்கவில்லை; அவதிப்பட் டோர்க்கு உதவிபுரியும் கடவுள் இருக்கவில்லை; அறியாத மக்களின் துன்பங்களைக் கண்டு இரக் கப்படும் கடவுள் இருக்கவில்லை; உடலில் தழும்புகள் ஏற்ற அடிமைகள்பற்றியோ, குழந் தைகளிடத்திருந்து துண்டிக்கப்பட்ட தாய் மார்களைப்பற்றியோ கவலையுறும் கடவுள் இருக்கவில்லை; சித்ரவதை செய்யப்படும் மக்களைக் காப்பாற்றும் கடவுள் இருக்கவில்லை; நெருப்பிலே தள்ளப்படும் தன்னலமற்ற வீரர் களைக் காக்க முன்வரும் கடவுள் இருக்கவில்லை, என்பது தானே பெறப்படும். வேறு சொற்க ளால் குறிப்பிடவேண்டுமானால், மேலுலகத்தி லிருந்து மனிதன் எந்தவித உதவியையும் பெற வில்லை; இடப்பட்ட பலிகளெல்லாம் வெறும் வீண்; வழிபாட்டுரைகளெல்லாம் பதிலுரைக் கப்படாமலேயே, வெறுங்காற்றில் மறைந்தொழிந் தன, என்பதை இது தெளிவாக்கிக் காட்டுகின் றது என்னலாம். நான் எல்லாம் அறிந்திருப்ப தாகப் பாசாங்கு செய்யவில்லை. நான் எதைச் சரி என்று சிந்திக்கிறேனோ அதையே சொல்லு கிறேன்.

பொருளும் ஆற்றலும் எல்லையற்ற காலத்தி லிருந்து நின்று நிலவி வருகின்றன என்றால்,

நடக்கக் கூடியனவெல்லாம் நடந்துவந்திருக்கின்றன; நடக்கக்கூடியனவெல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன; நடக்கக் கூடுவனவெல்லாம் இனி நடைபெறும் என்பது தானே பெறப்படும்.

அண்டத்தில், இயற்கை எதிர்பார்க்காத வாய்ப்போ, காணாத திடீர் மாற்றமோ ஏற்பட வழியில்லை. ஒவ்வொரு நிகழ்ச்சியும் அதனதன் பெற்றோர்களைக் கொண்டேயிருக்கின்றன.

நிகழாத ஒன்று இருக்கமுடியாது. நிகழ் காலம், இறந்தகாலத்தின் காரியமும், எதிர் காலத்தின் காரணமும் ஆகும்.

எல்லையற்ற பெருஞ் சங்கிலியில் பிளவு ஏற்படவோ, கரணையொன்று காணாமற்போகவோ செய்யவில்லை; இனியும் செய்யாது. நட்சத்திரங்களின் அளவும் அமைப்பும், உலகங்களின் தட்பவெட்பநிலை, பல்வேறு வகைப்பட்ட மரவகைகள்—விலங்கு இனங்கள், எல்லாவித உணர்ச்சி—அறிவு—மனச்சான்று, எல்லாவித விருப்புகள்—வெறுப்புகள், எல்லாவித நன்மைகள்—தீமைகள், எல்லாவித எண்ணங்கள்—கனவுகள், எல்லாவித நம்பிக்கைகள்—அச்சங்கள் இவையெல்லாம் அவசியத்தையொட்டி எழுந்தனவாகும். இந்த எண்ணற்ற பொருள்களிலும், அவைபற்றிய தொடர்புகளிலும், இயற்கை விதிகளுக்கு மாறுபட்ட ஒன்று, இந்த அண்டத்தில் இருக்கமுடியாது.

பொருளும்—ஆற்றலும் எல்லையற்ற காலந்தொட்டு இருந்துவருகின்றனவென்றால், மனிதன் அறிவுடைய படைப்பாளர் எவரையும் கொண்டிருந்ததில்லை; மனிதன் தனிப்படைப்பைச் சேர்ந்தவனல்லன், என்று நாம் எளிதிற் கூறலாம்.

நாம் ஏதாவது அறிந்திருக்கிறோம் என்றால், ஜெஹோவாவாகிய கடவுட்குயவனார், களிமண்ணைப் பிசைந்து, ஆண்—பெண் வடிவங்களைச் செய்யவில்லை; பிறகு அவர்களின் உடல்களில் ஊதி உயிர்க்காற்றை எழுப்பி, அவர்களைப் பிறப்பிக்கச் செய்யவில்லை என்பதைத் தெளிவாக நாம் அறிகிறோம்.

நமது முதல் பெற்றோர்கள் வெளியிலிருந்து வரவில்லை என்பதை நாம் அறிவோம். அவர்கள் இவ்வுலகைச் சேர்ந்தவர்கள் என்பதையும், இங்கேயே உற்பத்தி செய்யப்பட்டவர்கள் என்பதையும், எந்தக் கடவுளின் ஊதுதலிலிருந்தும் அவர்களின் வாழ்வு பிறக்கவில்லை என்பதையும் நாம் அறிவோம். ஏதாவது நாம் அறிந்திருக்கிறோமென்றால், இந்த அண்டம் இயற்கையானது என்பதையும், ஆண்களும்—பெண்களும் இயற்கையாகவே உற்பத்தியாக்கப்பட்டார்கள் என்பதையும் நாம் இப்பொழுது நன்கு அறிவோம். நாம் நம் முன்னோர்களை அறிவோம்; அவரது வழிவழித் தலைமுறையினரை அறிவோம்.

சங்கிலியின் எல்லாக்கரணைகளையும், புல்வகையிலிருந்து மனிதவகை வரையிலுள்ள இருபத்தாறு கரணைகளையும் நாம் அறிந்திருக்கிறோம்.

நாம் இந்தச் செய்திகளை அறிந்தது, வேத நூல்களிலிருந்தல்ல. நாம், எலும்புக்கூடுகள் கூறும் உண்மைகளிலிருந்தும், வாழும் உயிரினங்களின் வடிவங்களிலிருந்தும் அவற்றை அறிகிறோம்.

மிகச்சாதாரண உணர்ச்சியற்ற அணுத்திரள்களிலிருந்து, உயிரணுத்தோன்றி, அந்த உயிரணு நீர்க்கோத்தவொன்றாகி, அது இரண்டாகப்பிரிந்து, பிரிந்தவொன்று புழுவாகி, பின் நீண்ட—பருத்த புழுவாகி, பின் முதுகு எலும்புடையனவாகிப், பின் நீர்வாழ்வனவாகிப், பின் ஊர்வனவாகிப் பின் பறப்பனவாகி, பின் நடப்பனவாகிப், பின் விலங்குகளாகிப், பின் குரங்காகிப், பின் வாலில்லாக் குரங்காகிப், பின் கொரில்லாவாகிப், பின் மந்தியாகிப், பின் மனிதனாகி வளர்ந்து வந்திருக்கும் வழிவழித் தலைமுறை வரலாற்றை நாம் அறிந்திருக்கிறோம்.

வாழ்வு நடந்துவந்த வழியை நாம் அறிகிறோம். முன்னேற்றத்தின் அடிச்சுவடுகளை நாம் அறிகிறோம். அவைகள் முறையாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வளர்ந்துவரும் சங்கிலியின் கடைசிக் கரணையையும் நாம் அறிகிறோம். இவற்றிற்கெல்லாம், நாம், மற்றெல்லோரைக் காட்டிலும், மிகச்சிறந்த உயிர் நூல் வல்லுநராகிய ஏனெஸ்ட்ஹேக்கேலுக்கு மிகக் கடமைப்பட்டிருக்கிறோம்.

எனவே, இப்பொழுது, நாம் அண்டம் இயற்கையானது என்பதை உணருகிறோம்; இயற்கைக்கு மீறியவொன்று இருப்பதை மறுக்கிறோம்!

மதக்குருக்களின் மமதையாட்சி

மதம், ஐரோப்பாக் கண்டத்தை ஆட்டிப் படைத்ததுபோல், வேறு எந்த நாட்டையும் அவ்வளவாக ஆட்டிப் படைத்ததில்லை; அது ஐரோப்பாக் கண்டத்தில் அடங்கி ஒடுங்கிய தைப்போல், வேறு எங்கும் அடங்கி ஒடுங் கியதுமில்லை.

மக்களின் மடமையையும், மூடபக்தியையும் முதலாக வைத்துக்கொண்டு கத்தோலிக்க மதம் ஆதிக்கம் செலுத்தி வந்தது. மன்னாதி மன்னர்களிலிருந்து சாதாரண மனிதன் வரை யில் மதக்குருமார்களின்முன் மண்டியிட்டுக் கிடந்தனர். ஆண்டவனின் பேரரசுக்கு ரோம் நகரமே தலைநகரமாகக் கருதப்பட்டது; போப் பாண்டவர் ஆண்டவனின் பிரதிநிதியாகக் கொள்ளப்பட்டார்; ரோம்நகரிலுள்ள செயின்ட் பீட்டர்ஸ் சர்ச், ஆண்டவன் பிரதிநிதியின் அரண்மனையாகக் காட்சியளித்தது.

ஆண்டவனின் அருளைப் பெற, மன்னர்கள், நாடு நகரங்களையும், மாட மாளிகைகளையும், பொன்னையும் மணியையும் போப்பாண்டவ ரிடம் காணிக்கையாக வைத்தனர். சீமான்கள் நிலபுலங்களைக் காணிக்கையாக்கி, போப்பின் அருள்மொழியை எதிர்பார்த்து நின்றனர். போப்பாண்டவரின் மனங்குளிர நடப்பதே, இறைவனின் அருளைப்பெற ஏற்ற வழியாகும் என்று கருதி, அழகுடைய அணங்குகள் தங்கள் உடல், பொருள் எல்லாங்கொடுத்து வழிபாடு செய்தனர். பொதுமக்களோ தாங் கள் இதுவரை செய்த பாபம், இனிச் செய்யப் போகிற பாபம் இரண்டினையும் ஒரே சமயத்தில் போக்குவதற்கான கழுவாய், பொன்னையும், வெள்ளியையும் கொடுத்துப் பாபமன்னிப்புச் சீட்டுகளை வாங்குவதே என்று கருதியிருந் தனர். கி. பி, ஒன்பதாம் நூற்றாண்டிலிருந்து, கி. பி. பதினாறும் நூற்றாண்டு வரையில் மதக் குருமார்களின் ஆதிக்கம் ஐரோப்பா முழுவ தையும் நடுநடுங்கவைத்தது.

மக்களுக்கு 'அருள்நெறி' புகட்டுவதற்கும், பாபமன்னிப்புச் சீட்டுகளை விற்பதற்கும், மக் கள் கொடுக்கும் காணிக்கை வரிப்பணத்தை ரோம் நகருக்கு அனுப்பிவைப்பதற்கும், ஆங் காங்கு சர்ச்சுகளும், அவற்றைக் கண்காணிக்க குருமார்களும் தோற்றுவிக்கப்பட்டனர்.

சிலபொழுதுகளில் நாடாளும் அரசனுக்கும், போப்பாண்டவருக்கும் சண்டை சச்சரவுகள் மூளுவதுண்டு. யார் யாருக்குள் அடக்கம் என்ற பிரச்சினை எழுந்துவிடும். அரசனும் அரசும் தமக்கு அடங்கி நடக்கவேண்டியவை களே யொழிய, தாம் அரசனுக்கு அடங்கி நடக்கவேண்டிய அவசியமில்லை என்று போப் புகள் வாதிட்டனர். பாதகாணிக்கை பெறுவது, சர்ச்சுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து வருமானத்தைப் பெறுவது, மாதாகோவில்களி லும் மடாலயங்களிலும் குருமார்களை நியமிப் பது, குருமார்களைத் தள்ளுவது, அவர்களை விசாரித்துத் தண்டனை அளிப்பது போன்ற அலுவல்களில் தலையிட அரசனுக்குச் சிறிதும் உரிமையில்லை; அவை முழுவதையும் கண் காணிக்கவேண்டிய பொறுப்பு தங்களுடையதே என்று போப்புகள் நிலைநாட்டினர். ஆண்டவன் அரசு, குடிமக்கள் அரசு ஆகிய இரண்டையும் ஆணை செலுத்தும் உரிமை தங்களுக்கு மட் டுமே உண்டு, அரசனே தங்களுக்கு அடங்கி யிருந்து குடிமக்கள் அரசைப் பாதுகாத்து வரவேண்டும் என்று அவர்கள் நிபந்தனை போட்டனர். தாங்கள் அனுமதித்தால் ஒழிய அரசன் மணிமுடி தரிக்க முடியாது என்றும் அவர்கள் மிரட்டினர். ஆண்டவனுக்கு அஞ்சிய மன்னர்களும், தாம் அடங்கி நடக்க மறுத்தால் போப்பின் எதிர்ப்பும், பொதுமக்கள் எதிர்ப்பும் வருமோ என்று அஞ்சிய மன்னர்களும், போப் பாண்டவரின் கட்டளைக்கு அடங்கி நடந்தனர். வேறு சிலர் தம் படைவலியையும், தம்மைச் சார்ந்த பிரபுக்கள், பாதிரிமார் ஆகியவரின் துணையையும் வைத்துக்கொண்டு போப்பை எதிர்த்துத், தம் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்றனர்.

ஆண்டவன், மோட்சம், பேரின்பம் போன்ற ஆசைகளைக் காட்டியும், சாத்தான், நரகம்,

வேதனைகள் போன்ற அச்சங்களைக்காட்டியும் பொதுமக்களைத் தம்பால் இழுத்துக்கொள்ளக் கூடிய 'பாசக்கயிறு' போப்பாண்டவர்களிடம் இருந்ததால். பெரும்வகையில், மன்னர்களை அடக்கித் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள அவர்களால் முடிந்தது.

நான்காம் ஹென்றி என்பான் ஜெர்மனி நாட்டை ஆண்டபோது, ஏழாவது கிரிகரி என்பார் ரோம் நகரில் போப்பாக வீற்றிருந்தார். போப்பின் ஆதிக்கம் தன்னைக் கட்டுப்படுத்துவதை ஹென்றி விரும்பவில்லை; போப்பினுடைய கட்டளைகளை மதித்து நடக்க மறுத்தான். தம்மைமீறி ஹென்றி தன் இச்சைப்படி நடந்துகொள்கிறான் என்பதை அறிந்த போப் கிரிகரி, அவனது செல்வாக்கை அடக்கி ஒடுக்க நினைத்தார். இரண்டுபேருக்கும் சச்சரவு மூண்டது. போப் கிரிகரி, ஹென்றியை மதவிலக்குச் செய்துவிட்டதாகவும், மற்றநாட்டுக் கத்தோலிக்க அரசர்கள் எல்லாம் அவனை அரசன் என்று இனி யாரும் மதிக்கக்கூடாது என்றும், ஜெர்மனி மக்கள் அவனை அரியணையில் வைத்திருக்க இணங்கக்கூடாது என்றும் கி. பி. 1077-ல் கட்டளை பிறப்பித்தார்.



போப்பின் கட்டளை எங்கணும் பறந்தது. பாமர மக்களின் எதிர்ப்பும், பல்வேறு நாட்டு மன்னர்களின் எதிர்ப்பும் நான்காம் ஹென்றிக்கு எதிராகத் திரண்டெழுந்தன. ஹென்றியால் எதிர்ப்பைச் சமாளிக்க முடியவில்லை; தனது அரசுரிமையே பறிபோய்விடுவது போன்றதொரு நிலைமை ஏற்பட்டது.

போப்பிடம் மன்னிப்புக் கோருவதைத் தவிர வேறு வழி ஏதும் காணாமல், இறுதியாக, ஹென்றி போப்பிடம், சரண்புக ஓடினான் அப்பொழுது போப் மவுண்ட்சேனிஸ் என்ற இடத்தில் தங்கியிருந்தார். குளிரின் நடுக்கம் தாங்க முடியாத மாரிக்காலத்தில், செனிஸ் மலையின் சரிவுகளில் ஏறமுடியாமல் ஏறிப், போப்பின் 'தரிசனத்' துக்குக் காத்துக்கிடந்தான். போப் அவனை ஏறிட்டும் பார்க்காமல், அங்கிருந்து கனோசா என்ற கோட்டைக்குத் தங்கப் போய்விட்டார். ஹென்றி அவர் பின்னாலேயே ஓடினான்.

போப் ஹென்றியைப் பார்க்க மறுத்துவிட்டு, கோட்டைக்குள்ளேயே ஓய்வெடுத்துக்கொண்டிருந்தார். காலமோ கடுங்குளிர்காலம்; எங்கணும் பனிக்கட்டிகள் விழுந்து உறைந்துகொண்டேயிருந்தன; இந்த நிலையில் ஹென்றி, கோட்டைவாயிலில், குளிரில் நடுநடுங்கிக்கொண்டு காத்துக்கிடந்தான். காவல் மிகுந்த கோட்டையினுள்ளே ஹென்றி அனுமதிக்கப்படவில்லை. கோட்டையின் வாயிலிலேயே மூன்றுநாள் கிடந்தான்; ஊனின்றி, உறக்கமின்றி! மூன்று நாட்களுக்குப் பிறகு, போப் வெளியே வந்து, அவன் இனி அடங்கி நடப்பதற்கான நிபந்தனைகளையெல்லாம் அவனிடம் வாங்கிக்கொண்டு, ஹென்றியை மன்னித்தார். அந்தக் காட்சியைத்தான் படம் தெளிவாக்கிக் காட்டுகிறது.

ஜெர்மனியின் பேரரசனை, மதக்கருத்தின்படி 'ஒட்டாண்டி'யான போப் மண்டியிடச் செய்தான்! அந்த அளவுக்கு மூடபக்தியும், மூடநம்பிக்கையும், முட்டாள்தனமும் அந்த நாட்களில் ஆண்டவன் பேரால் அனைத்தையும் ஆட்டிப்படைத்தன!

மதத்துறையில் தங்களுக்குக் கிடைத்த செல்வாக்கையும், ஆதிக்கத்தைதையும் வைத்துக்கொண்டு மதக்குருமார்களும், போப்பாண்டவர்களும் ஏதேச்சாதிகார ஆட்சி நடத்தினர். மாவீரனாயினும், மணிமுடி தரித்த மன்னனாயினும் மதக்குருவின் கோலாகல வாழ்வுக்கு அடிபணிந்தே வாழவேண்டியிருந்தது.

கிளியோபாவின் காதலன்

[இரா. செழியன்]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

கரையையடுத்து, உள் தள்ளியிருந்த வெள்ளைக் கட்டிடத்தை அங்குமிங்கும் மறைத்துக் கொண்டு ஒரு பெரிய தோட்டமிருந்தது. அது ஒரு தோட்டமென்றுகூட கூறமுடியாது, ஒரு சிறிய காடு என்றே சொல்லிவிடலாம். அந்த அளவுக்கு மாஞ் செடிகொடிகள் எங்கணும் மண்டிக்கிடந்தன. சுற்றிலுமுள்ளவற்றைக் கண்காணிக்க அமைக்கப்பட்ட காவற்காரர்களைப்போல உயர்ந்து நிற்கும் நெடுமரங்கள், அவற்றினருகே சிறிதும் பெரிதுமாகப் பரவியிருந்த சிறு செடிகள், வளைந்து படுத்துக் கிடக்கும் முந்திரி மரங்கள், அலைந்துதிரியும் முல்லைக்கொடிகள், பொன்னுடை போர்த்த புன்னை, புதுமலர்களைச் சிதறிடும் வண்ணச் செடிகள் வகைவகையாக வளர்ந்திருந்தன. திக்கார்ந்திட, சிறுபறவைகள் கூவிட, தென்றல் சிலிர்த்திட, தேன்மலர்கள் அசைந்திட, மறைகின்ற கதிரவனின் மஞ்சள் கரங்கள் அடர்ந்த மரங்களின் உச்சியில் பொன் வண்ணத்தைப் பூசிட, அந்த அந்தி மயங்கிடும் வேளை-மனதை மயக்கிடும் மாலையாக இருந்தது.

புதியதோர் உலகிலே, புதுமையானதோர் காலத்திலே அடியெடுத்து வைப்பவனைப்போல, கவிதைப்பொழிலிலே, கனவுலகிலே நடமாடுபவனைப்போல, அந்தத் தோட்டத்தில் நடந்து சென்று, வழியில் தடுக்கி நிறுத்திய ஒரு மரத்தின்மீது அமர்ந்தேன். சுற்றிலும் பார்த்துவிட்டுத் திரும்பியதும், என்னெதிரே இரு கண்கள்—அசையாத இருகண்கள் என்னையே உற்றுப் பார்த்துக்கொண்டிருப்பதை உணர்ந்தேன். பறித்தெடுத்த பார்வையில் மகிழ்ச்சியும், மனதை இழுத்திடும் கவர்ச்சியும் குடிகொண்டிருந்தன. அவர் மிக அமைதியுடன் அமர்ந்திருந்தார்.

"நீ இனிமேல் இவ்வாறு படகோட்டி வருதல் கூடாது! ஏன் தெரியுமா? இதோபார்! உன் மென்மையான விரல்கள் எவ்வாறு சிவந்துவிட்டன!" என்று என் கைவிரல்களைப் பற்றிப் பார்த்துக்கொண்டிருந்தார். "நீ மிகவும் அதிருஷ்டசாலிதான்!"

"எப்படி?" என்றேன்

"உன் கையைப் பார்த்ததும் தெரிந்து கொண்டேன்."

"என்ன தெரிந்துகொண்டீர்கள்?"

"குறிபார்த்துச் சொல்லட்டுமா? ஆனால் அதற்கு என்ன கூலி தருவாய்?"

"தப்பாத முறையில் குறிசொன்னால், தவறில்லாத வகையில் கூலி தருவேன்."

"சரி! இது சூரியன்....இது சந்திரன்.... இது ஜூபிடரின் இடம்...வீனஸ்—அங்கிருந்து நீண்ட கோடு! அரசியே! வீனஸ் தேவதையின் அருள் உங்களுக்கு நிச்சயம் உண்டு. வீனஸ் தேவதை யார் தெரியுமா?"

"எனக்கு ஒன்றும் தெரியாதே!"

"அந்த தேவதைகூட ஒன்றுந் தெரியாதவள்தான்! அவளும் உன்னைப்போன்று காதலின் அரசியாக விளங்குபவள்."

"இருவருக்கும் போட்டி வந்துவிடாதே!"

"உன்பால் பொறுமை கொண்டவள்தான் அவள்! இல்லாவிட்டால் இவ்வளவு நாளும் நம்மை பிரித்துவைத்திருப்பாளா? உண்மையிலே நீ எங்கு ஒளிந்திருந்தாய் இத்தனை காலமும்? மின்னுகின்ற நட்சத்திரம், விழித்து நோக்கும் மலர்கள், வட்டமான முழுநிலா, சிவந்த பவழம், சிரித்திடும் மணிமுத்துக்கள் இவைகளைப் பார்த்திருக்கிறேன் இதற்கு

முன்னம். ஆனால் உன் முகத்தைப் பார்த்த தில்லை. எழில்மிகு ஓவியமே! என் இதயக் கனவே! எங்கே உன் முகத்தைச் சற்றுத் திருப்பு! என் கண்ணே!"

"என் அன்பே!"

"கிளியோ! கிளியோ!!"

அந்தப் பெயர் என் நெஞ்சிலே திடீரென்று நஞ்சைக் கொட்டிற்று. என் முகத்தைத் தாங்கிக்கொண்டிருந்த கைகளை உதறிக்கொண்டு எழுந்து நின்றேன். இதுவரை அவர் காட்டிய காதல், பேசிய கனிமொழிகள் என்னிடமல்ல, எகிப்து நாட்டிலே இருந்தாளாமே, ஒரு சிங்காரி—கிளியோபாட்ரா அவளிடம். அவர் கண்களுக்கு நான் வசந்தாவாகப் படவில்லை. கிளியோவாக இருந்தேன். என் உள்ளத்தில் கோபமும் ஆத்திரமும் கொந்தளித்தன. மறு கணம் அங்கு—அந்த 'மாய' மனிதருடன் இருக்க நான் விரும்பாமல், ஓட ஆரம்பித்தேன். காலில் கல்லும் முள்ளும் இடறுவதையும் கவனிக்காமல், நான் தோட்டத்தைக் கடந்து வெளிவந்து திரும்பிப்பார்த்தேன். ஏதோ கூவியவண்ணம், அவர் ஓடிவந்துகொண்டிருந்தவர். திடீரென்று ஒரு மரத்தடியில் காலிடறி கீழே விழுந்தார். இல்லையானால் அவர் ஓடிவந்த வேகத்திற்கு நான் சிறிதுதூரம் போவதற்குள் அகப்பட்டிருப்பேன். ஆனால் கீழே விழுந்தவர் எழுந்திருக்காமல் விழுந்தபடியே இருந்தார். பலமான அடிபட்டிருக்குமென நினைத்துத் திரும்பிப்போய்ப் பார்க்கலாமாவென தடுமாறிக்கொண்டிருந்தேன். அந்தச் சமயம் கட்டிடத்துக்குள்ளிருந்து சிலர், கீழே விழுந்த சத்தம் கேட்டு ஓடிவந்து தூக்கிப் பார்த்தனர். மறைவாக நின்று பார்த்த நான் தப்பித்தது போதுமென படகிலேறி அந்த இடத்தைவிட்டு விரைவாகச் சென்றேன்.

வீட்டிற்குப் போய் என் படுக்கையில் அமர்ந்ததும்தான், என் காலிலிருந்த முட்களும், கிறல்களும் வலிகொடுத்தன. ஊசியைக் கொண்டு மெதுவாக காலில் தைத்திருந்த முட்களை எடுத்தேன். அதற்குள் "வசந்தா! வசந்தா!" என்று கூப்பிட்டுக்கொண்டு அம்மா வந்துவிட்டார்கள். நான் ஒன்றுமறியாதவள் போல, காலை துடைத்துவிட்டு எழுந்து நடந்தேன்.

"ஏன் இப்படி நொண்டி நொண்டி நடக்கிறாய்?" என்று அம்மா கூப்பிட்டுப் பார்த்தார்கள். "ஏன் இப்படிக் காலில் இரத்தக் காயமாயிருக்கிறது?"

"முள் செடியில் அடி வைத்துவிட்டேன்."

"நல்ல கதையாயிருக்கிறது! செருப்பு போட்டுக்கொண்டு போனாயே?"

அப்பொழுதான் ஞாபகம் வந்தது, நான் போட்டுக்கொண்டுபோன செருப்புகளை அந்தத் தோட்டத்திலேயே விட்டுவந்திருக்கிறேன் என்பது. பாழாய்ப்போன தோட்டம்!

"ஏன் முழிக்கிறாய்? எங்கே போட்டோமென்று ஞாபகமில்லையா?"

நான் படுகிற வேதனையில் அம்மா கொடுக்கிறதொல்லை வேறு. "படகில் போகும்போது தண்ணீரில் அது விழுந்துவிட்டது," என்று நான் சொன்னேன்.

தண்ணீரால் காலைக் கழுவிவிட்டுத், தைத்திருந்த முட்களைத் தேடி அம்மா எடுத்துவிட்டார்கள். காலில் தைக்கிற முட்களை எடுத்துவிட முடிகிறது. ஆனால் இதயத்தில் தைத்துவிடுகிற முட்களை எவராலும் சுலபத்தில் எடுத்துவிட முடிவதில்லை.

கனவிலே காணும் காட்சிகள் எவ்வளவுதான் பிடித்தமானமானதாயிருந்தபோதிலும், கண் விழித்ததும் அவை நிலைபெற்று நிற்பதில்லை; மறைந்துவிடுகின்றன. நாமும் மறந்துவிடுகிறோம். அதுபோல அதற்குமுன் நடந்தவற்றையெல்லாம் மறந்துவிட முயன்றேன். மறுநாளும் அதற்குப் பின்னும் எங்கும் கிளம்பாமல் வீட்டினுள்ளேயே அடைபட்டுக் கிடந்தேன். புத்தகங்கள், பத்திரிக்கைகள் இவைகளைப் படிப்பதிலும், ரேடியோவைத் திருப்புவதிலும் காலத்தைக் கடத்தினேன். ஒருவாறு மனவமைதி கிட்டியது. சில சமயங்களில் அந்த பைத்தியக்கார மாவீரனைப் பற்றிய ஞாபகம் வரும். மரத்தடியில் கீழே விழுந்தபொழுது பலமாக அடிபட்டிருக்குமோ? தலையிலும், காலிலும் பெரிய கட்டுகள் போட்டிருப்பார்களோ? என்று நினைத்துப் பார்ப்பேன். மறுகணம் அதைப் பற்றி நமக்கேன் கவலையென்று வேறுபக்கம் கவனம் செலுத்துவேன்.

கடந்த சம்பவத்துக்குச் சுமார் ஒருவாரத்துக்குப்பின்தான மாசிலாமணியின் நிலைபற்றிய

செய்தி எனக்குக் கிடைத்தது. என்து அப்பாவும் சங்கரபாண்டியனும் பேசிக்கொண்டிருந்தபொழுது மாசிலாமணி என்ற பெயர் காதில் விழுந்தது. கையில் இருந்த புத்தகத்தைப் பார்த்தபடியே, அவர்கள் பேசிக்கொள்வதைக் கவனித்தேன். நான் இருப்பதை அவர்கள் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

"டாக்டர் வந்ததும் என்ன செய்தார்?" என்று அப்பா கேட்டார்கள்.

"டாக்டர் வருவதற்குள்ளேயே, அவன் எழுந்து உட்கார்ந்து நடமாட ஆரம்பித்தான். நாங்கள் எல்லோரும் ஆளுக்கொரு உடையுடன், அவனை அழைத்துக்கொண்டு வந்து அறையில் உட்காரவைத்தோம். மற்றவகையில் எல்லாம் பழையபடியேதான் இருக்கின்றன."

"எப்படி? யாரும் பார்க்கப்போவதென்றால், ரோம் உடையணிந்துகொண்டு தான்...."

"போய் பார்க்கமுடியும். முன்பு இருந்ததை விட இப்பொழுது தொல்லை வரவர அதிகமாகிக்கொண்டிருக்கிறது. அவனைப் பார்க்கப் போகிற ஒவ்வொருவரையும் சமயத்தில் கேள்விகள் கேட்டு திக்குமுக்காடச் செய்துவிடுகிறான். வேஷம் போட்டுக்கொண்டு போய் நின்றதும், அவன் கேட்கிற கேள்விகளுக்கு ஏதாவது பதில் சொல்லித்தானாகவேண்டியிருக்கிறது. பாருங்கள் நேற்று நான் போனபொழுது ஆண்டனி என்னைப்பார்த்து, "சிலியஸ்! உன்னுடைய தலை ஏன் கண்ணாடி போல வழுக்கையாக யிருக்கிறது!" என்று கேட்டான். நான் என்ன பதில் சொல்வது? முப்பது வருஷமாக இந்த அரசாங்கத்தில் வேலை பார்த்தேன் என்று காரணங் காட்டினால் ஆண்டனிக்கு என்ன புரியும்? ஆதலால், 'பிரபு! எகிப்து நாட்டுப் பாலைவனத்தில் படையுடன் சென்றபொழுது, அங்கு வீசிய வெப்பக்காற்றுப்பட்டு தலைமயிர் முழுவதும் கருகிவிட்டது, பின் முளைக்கவேயில்லை!' என்று தலைமொட்டைக்கு ஒரு மொட்டைப் பொய்யைச் சொன்னேன்" என்று சங்கரபாண்டியன் முடித்தார்.

நான் பேசாமல் எல்லாவற்றையும் கேட்டபடி உட்கார்ந்திருந்தேன். சங்கரபாண்டியன் என்னைப் பார்த்துக் "கதை எப்படியிருக்கிறது?" என்று கேட்டார். நான் ஒன்றுமறியாதவள்போல, என் புத்தகத்தைப் பார்த்து, "இப்பொழுதுதான் பாதி படித்திருக்கிறேன்!" என்று சொன்னேன்.

"அந்தப் புத்தகத்தைப்பற்றியல்ல, நான் இதுவரை சொல்லிவந்தது!"

"எதைப்பற்றி?" என்று நான் கேட்டேன்.

"எனக்குத் தெரிந்த ஒரு நண்பருடைய மகன், நாடகத்தில் வேஷம்போடப்போய், பைத்தியம் பிடித்து இப்பொழுது வேஷம் போட்ட நிலையிலேயே உட்கார்ந்திருக்கிறான்!"

"வேடிக்கையான கதை!" என்று சொன்னேன்.

அதற்கு அவர் "நீ வேடிக்கையென்று இங்கே உல்லாசமாக உட்கார்ந்துகொண்டு சொல்லுகிறாய்! அங்கே அவனுடைய அப்பா, அம்மா படுகிற வேதனைகளைப் பார்த்தால் அப்படிச் சொல்லமாட்டாய்!" என்று கூறினார். அவர் கூறியது என்னையே இடித்துக்காட்டுவது போலிருந்தது.

"வேதனையாகத்தான் இருக்கும். நல்ல டாக்டரை வைத்துப் பார்ப்பதுதானே!" என்று ஏதோ புதிதாகக் கேள்விப்படுபவர்கள் அக்கறை காட்டுவதுபோல் கேட்டேன்.

"ஓ! எல்லாம்தான் செய்கிறார்கள்! நானும் இன்று அங்கு வருவதாகச் சொல்லியிருந்தேன்! நான் போகவேண்டும்" என்று எழுந்தார். பின் என்பக்கம் திரும்பி, "நீ வருகிறாயா?" என்று என்னைக் கேட்டார்.

"ஏன்? எங்கு?" என்று கேட்டேன்.

"சுந்தரமூர்த்தி வீட்டுக்குத்தான்! சும்மா வேடிக்கை பார்க்கத்தான்; எப்படி நாடகத்தில் நடிப்பவர்கள்போல ஒவ்வொருவரும் வேஷம் போட்டுக்கொள்ளுகிறார்கள் என்பதைப் பார்க்கலாம்!"

"பாவம்! இதில் வேடிக்கை என்ன இருக்கிறது. சற்றுமுன் நீங்கள்தானே வேடிக்கையல்ல, வேதனையானது என்று சொன்னீர்கள்!" என்று மடக்கிக் கேட்டேன். மனதிற்குள் போய்ப் பார்க்கலாம் என்று தோன்றியபோதி

னும், வெளிக்கு அலட்சியத்துடனேயே இருந்தேன்.

கீழே இருந்த கடிகாரத்தில் மணி நான்கு அடித்தது. "நான் போகவேண்டும், நாழியாகி விட்டது!" என்று சங்கரபாண்டியன் கிளம்பினார். அவர் போகும்பொழுதுதான் நானும் அவருடன் போகலாம் என நினைத்தேன்.

"ஒவ்வொருநாளும் நீங்கள் மறந்துவிடுகிறீர்கள். எனக்குக் கொண்டுவந்து தருகிறேன் என்று சொல்லிய புத்தகங்கள் இன்றைக்கும் நீங்கள் கொண்டுவரவில்லை!" என்று உரிமையுடன் குறைசொன்னேன்.

"ஆமாம், வசந்தா! மறந்துவிடுகிறேன். இன்றைக்கு என்னுடன் வா! வேண்டிய புத்தகங்களை எடுத்துக்கொள்ளலாம்!" என்று கூப்பிட்டார். "சரி, இருங்கள்!" என்று உடை மாற்றிக்கொண்டு அவருடன் புறப்பட்டேன்.

சங்கரபாண்டியன்

நான் என் வீட்டைவிட்டு வெளிக்கிளம்பிய பொழுது டாக்டர் சம்பந்தத்தின் கார் குறுக்கிட்டது. என்னைப் பார்த்ததும் அவர் காரை நிறுத்தி, "எங்கே போகவேண்டும்?" என்று கேட்டார்.

"எங்கேயும் போகவேண்டுமென்று நான் கிளம்பவில்லை. காற்றடித்த திக்கு நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறேன்!" என்று பதிலளித்தேன். அவர் கதவைத் திறந்துவிட்டார், நானும் ஏறி உட்கார்ந்துகொண்டேன்.

"ஆனால் உங்களுடன் உட்கார்ந்துகொண்டு வருவதில் ஒரு ஆபத்து இருக்கிறது. யாரும் என்னைப்பார்த்தால், ஏதோ சித்தப்பிரமை பிடித்திருப்பதால்தான் டாக்டர் சம்பந்தம் அழைத்துக்கொண்டு போகிறார் என்று நினைத்துக்கொள்ளக்கூடும்."

டாக்டர் அதற்குச் சிரித்துக்கொண்டார். மனக்கோளாறுகளையும், சித்தப் பிரமைகளையும் அவர் ஆராய்ந்த தேர்ச்சிபெற்ற டாக்டர்.

"இப்பொழுது எங்கு போகிறீர்கள்?" என்று கேட்டேன். அவர் போக்கில் நேராகக் கொண்டுபோய்ப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குள் நிறுத்திவிட்டால், அப்புறம் வெளிவருகிற வரை நம் பாடு ஆபத்துதான்! இப்பொழுதே அக்கம்பக்கத்திலிருக்கும் சிறுவர்கள் வயதானவர்களைப் பார்க்கும்பொழுது பைத்தியக்காரனைப்பார்ப்பதுபோல் பார்க்கிறார்கள். உண்மையான பைத்தியக்காரர்களிடம் சிக்கிவிட்டால், வேறு வழிவேண்டியதில்லை.

"நான் சுந்தரமூர்த்திப்பிள்ளை வீட்டுக்குப் போகிறேன்."

"மாசிலாமணியைப் பார்ப்பதற்குத்தானே!"

"உங்களுக்கு அவரைத் தெரியுமா?"

"நன்றாகத் தெரியும். நான்கூட ஒருநாள் அவர் வீட்டுக்குப்போய், ஒரு வேஷம் போட்டுக்கொண்டு உள்ளேபோய்ப் பார்த்தேன். சில மந்திர தந்திரக்காரர்கள் மற்றவனுக்குப் பாம்போ தேளோ கொட்டிவிட்டால், தம்முடைய கையைப் பிடித்து மந்திரித்துக்கொள்வார்கள். அதைப்போல அவன் வேஷம்போட்டதற்கு, மற்றவர்களுக்கு வேஷம் போட்டுவிட்டீர்கள்! இன்னும் எவ்வளவு நாள் இந்தக் கூத்து நடக்கும்?" என்று நான் கேட்டேன்.

"சொல்லமுடியாது, ஒரு வாரத்தில் குணமாகலாம், இன்னும் ஒருமாதம்கூட பிடிக்கலாம். ஆனால் ஒன்றுமாத்திரம் நன்றாகத் தெரிகிறது. முன்பு இருந்த நிலை வளரவில்லை. அதைத் தடுத்து நிறுத்திவிட முடிந்தது."

அதற்குள் சுந்தரமூர்த்தியின் தோட்டத்தில் போய் கார் நின்றது. நாங்கள் உள்ளேபோய், ஒவ்வொரு வேஷத்தைப் போட்டுக்கொண்டோம். ரோம் நாட்டுக் கிழவர்போல ஒரு வேஷத்தை நான் ஏற்றுக்கொண்டேன். அதில் அதிகக் கஷ்டமில்லாதிருந்தது. ஒரு நீண்ட வேட்டியை உடலில் சுற்றிக்கொண்டு மூனையைக் கையில் போட்டுகொண்டால் போதுமானது. நானும், டாக்டரும், சுந்தரமூர்த்தியும் உடைகளணிந்து தயாரானதும் முன் கூட்டியே பேசவேண்டிய பேச்சுகளைத் தயாரித்துக் கொண்டு உள்ளே நுழைந்தோம்.

முதலில் நுழைந்த நான் "ஹெயில் ஆண்டனி!" என்று சத்தம் போட்டேன். பதில் ஏதும் வரவில்லை. சுற்றிலும் பார்த்தால் ஆண்டனியை அந்த அறைக்குள் எங்கும் காணோம். பக்கத்து அறைகளிலும் பார்த்த பொழுதும் காணோம். தேடிப் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது, ஜன்னலைத் திறந்த டாக்டர் "அதோ!" என்று கூவி, எங்களை அருகே அழைத்தார்.

தோட்டத்தில் கீழேகிடந்த ஒரு மரத்தின் மீது ஒரு பெண்—பின்புறம் மட்டும் தான் எங்களுக்குத் தெரிந்தது — உட்கார்ந்திருந்தாள். அவள் காலடியில் அமர்ந்தபடி "ஆண்டனி" ஏதோ பேசிக்கொண்டிருப்பது தெரிந்தது.

அந்தக் காட்சி எங்களனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது; எங்களுக்குத் தெரியாமலே, நாங்கள் நடத்துகிற நாடகத்தில் ஒரு புதிய பாத்திரம் நடமாடுகிறதென்றால்! மாசிலாமணி அவள் முன் மண்டியிட்டுப் பேசிக்கொண்டிருப்பதைக் கவனிக்கும்பொழுது, இருவரும் நெடுநாளாக ஒருவரையொருவர் தெரிந்தவர்கள் போலக் காணப்பட்டனர். அதிலும் ஒரு பித்தம் பிடித்தவனிடம் ஒரு பெண் தனியாக அமர்ந்து உரையாடுகிறாள்! ஒருவேளை அந்தப் பெண்ணும் பித்துப்பிடித்தவளாக இருந்தால்! ஒருவருக்கு வைத்தியம் செய்யப்போய், இன்னொருவரையும் அழைத்துக் கொண்டதாகிவிடும். பின்பு அந்த வீடு போதாது. ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியே திறக்கவேண்டி யிருக்கும்.

தோட்டத்தில் நடந்த நிகழ்ச்சி என் கவனத்தை மறுபடியும் திருப்பியது. மிகவும் உல்லாசத்துடன் அமர்ந்திருந்த அந்தப்பெண் திடீரென்று எழுந்து, சுற்றிலும் பார்த்துவிட்டு, ஓட ஆரம்பித்தாள். மாசிலாமணி சற்றுநேரம் திகைத்து நின்றுவிட்டு, "கிளியோ! கிளியோ!" என்று கூவிக்கொண்டு அவள் பின்னால் ஓடினான். வழியில் கிடந்த மரமொன்றில் அவன் காலிடற, அவன் கீழே விழுந்துவிட்டான். விழுந்தவன் உடனே எழுந்திருக்காமலிருக்கவே, நாங்கள் எங்கள் இடத்தைவிட்டுத், தோட்டத்திற்குப் போய் அவனைப்பார்த்தோம். பேச்சுமூச்சின்றி மாசிலாமணி கிடந்தான்.

நல்லவேளையாக டாக்டரும் உடனிருந்ததால் நல்லதாயிற்று. அவனைத்தூக்கி, வீட்டுக்கு அருகாமையிலிருந்த பெஞ்சு ஒன்றில் படுக்கவைத்து, முகத்தில் தண்ணீர் தெளித்துப் பார்த்தோம். ஆனால் மூர்ச்சை தெளிவதற்குச் சற்று நேரமே பிடித்தது. அதற்குள் டாக்டர் தமது மருந்துப் பெட்டியை எடுத்துவர, காருக்குப் போனார். அவர் திரும்பி வருவதற்குள் மாசிலாமணி கண் விழித்துச் சுற்றிலும் பார்த்தான். அவசரமாகக், கலைந்திருந்த எங்கள் உடைகளைச் சரிசெய்து கொண்டு, ஆண்டனியை அழைத்துப்போய் அறைக்குள் உட்காரவைத்தோம்.

ஆண்டனியின் நிலை சரியானதும், தோட்டத்தில் இருந்த பெண்ணின் கவனம் எங்களுக்கு வந்தது. திரும்பவும் தோட்டத்திற்குப்போய் எல்லாவிடங்களிலும் அவளைத் தேடினோம். யாரையுங் காணோம். சுற்றிலும் வேலைக்காரர்களைப் பார்த்துவரச் செய்தோம். எப்படி அந்த இடத்திலிருந்து மாயமாக மறைந்தாளென்றே தெரியவில்லை. பக்கத்துத் தோட்டத்துக் காவல்காரர்கள் யாரும் அங்கு வரவில்லையென்று சொன்னார்கள். சுந்தரமூர்த்தியின் வீட்டு முன் பக்கமாக அவள் போயிருக்கமுடியாது. கடைசியாக ஒரே வழிதான் பாக்கியிருந்திருக்க முடியும். தோட்டத்தின் பின்பக்க மிருந்த அடையாற்றில் அவள் குதித்துச் சென்றிருக்க முடியும். ஆனால் அவள் எப்படி அங்கு வந்தாள் என்பது தெரியவில்லை. அதிலும் அவளைக் கிளியோபாட்ராவாக மதித்து, மாசிலாமணி பேசியிருக்கிறான். எல்லாம் மாயமாகவே யிருந்தன.

ஒரு 'கிளியோபாட்ரா' தோன்றி மறைந்தது எங்களுக்கு மட்டுமல்ல, ஆண்டனிக்கும் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கவேண்டும். அவள் பிரிந்து சென்றதற்கப்புறம், மற்றவர்கள் என்ன சொல்லியபோதிலும், ஆண்டனி, அதிகம் உற்சாகம் காட்டாமலிருந்தான். யார் உள்ளே வந்தாலும், அவனுடைய கண்கள் வேறு எதையோ தேடுவதுபோல, ஆராய்ந்த வண்ணமிருந்தன. அவனுடைய "கிளியோ"வைத்தான் தேடுகிறான். ஆனால் அந்தக் 'கிளியோ' யார்? தோட்டத்தில் அவனை இடறச் செய்துவிட்டு, ஓடிப்போன அணங்கு யார்? என்பது எங்களுக்குத் தெரியாமலிருந்தது.

(தொடரும்)

●

ருஷியாவில், ஜாரரசன் காலத்தில், அறிவிலோ, திறமையிலோ சிறந்தவனாக எவனாவது காணப்பட்டால், அவன் உடனே சைபீரியசிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டுவிடுவானாம். இது மிக நல்ல வேலைதான். இதனால் மக்களின் அறிவும், கல்வியும், ஆளுகிற அரசனுக்குக் கீழ்ப்பட்டனவாகவே வைத்துவர முடிந்தது.

—மார்க் ட்வெயின்.

அதிசயம்—ஆனால் உண்மை

கொடிய கொலைஞன்

புக்காராம் என்ற, வட இந்தியாவைச் சேர்ந்த மிக்கப் பயங்கரமானத் துணிகரக் கொலைகாரன், நாற்பது ஆண்டுகளில் 931 படுகொலைகள் புரிந்தானாம். கொலைசெய்தலைத் தொழிலாகக் கொண்டிருந்த அவன், அவ்வளவு கொலைகள் செய்தும், யாருக்கும் அகப்படாமலேயே வாழ்ந்து வந்தானாம்.

ஃ ஃ ஃ

அழியாத் தலைமுறை

ஜப்பானை இன்று ஆண்டுவரும் பேரரசன் ஹிராஹிட்டோ அழியா ஆளும் பரம்பரையைச் சேர்ந்தவனாவான். ஜிம்மு டென்னோ என்ற அவனது குடும்பம், 2597 ஆண்டுகளாகத் தந்தை, மகன், பேரன், பேரனுக்குப் பேரன் என்ற முறையில் தலைமுறை தலைமுறையாக இடையீடு ஏதுமின்றி வழிவழி வந்துகொண்டே இருக்கிறது. இப்பொழுது, ஹிராஹிட்டோ 124-வது தலைமுறையாவான். உலகிலேயே அழியாமலிருந்துவரும் மிகப் பழைமையான அரச குடும்பம் ஜப்பான் அரச குடும்பந்தான்.

ஃ ஃ ஃ

வகுக்கமுடியாப் பேரெண்

எழுதிக் காட்டக்கூடிய மாதிரியில், வேறு எந்த எண்ணாலும் வகுக்கமுடியாத வகையில் அமைந்த பேரெண்

170,141,183,460, 469, 231, 731, 687, 303, 884, 105, 727

ஆகும். இதனை 1877-ம் ஆண்டில் எதுவார்டு லூகாஸ் என்ற கணித நிபுணர் கண்டுபிடித்தார்.

ஃ ஃ ஃ

கருவிலே முடியேற்ற காவலன்

பிறப்பதற்கு முன்னே ஒரு மன்னன் முடிசூட்டிக்கொண்டான் என்றால், அது நடந்திருக்கமுடியாததொன்றாகவே யாவர்க்கும் படும். ஆனால் அத்தகைய நிகழ்ச்சியொன்று நடந்தேறத்தான் செய்தது.

பாரசீகத்தில் கி. பி. நான்காம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்துவந்த ஷா ஹார்மௌஸ் என்ற அரசன் இறந்தபோது, அவனுடைய மனைவி கருவுற்றிருந்தாள். அரசிக்குப் பிறக்கும் குழந்தை ஆணோ அல்லது பெண்ணோ என்ற ஐயப்பாட்டின்பேரில், அரியணை ஏறுவதற்குப் பலர் போட்டியிட்டுக்கொண்டுவந்தனர். பெரும் உள்நாட்டுக் குழப்பம் மூளும்போலிருந்தது.

அரசி மாகி உள்நாட்டுக் குழப்பத்தை அடக்கவும், தன்னுடைய நிலையை நிலைநாட்டிக் கொள்வதற்கும், தனக்குப் பிறக்கப்போகும் குழந்தை ஆண்குழந்தைதான் என்றும் அந்தப் படிக்கு ஆண்டவனே கனவில்வந்து கூறினான் என்றும் கூறினாள். மூட நம்பிக்கையில் ஆழ்ந்துகிடந்த மக்கள், அரசி சொல்லியதை அப்படியே நம்பி ஏற்றுக்கொண்டனர். குழந்தை கருவிலிருக்கும்போதே முடிசூட்டிவிடுவது என்று முடிவு செய்யப்பட்டது. முடிசூட்டுவிழாவிற்கான ஏற்பாடுகளெல்லாம் நடைபெற்றன. முடிசூட்டுவிழா மண்டபத்தில் ஆடம்பரமான படுக்கையொன்று போடப்பட்டது. விழாவன்று அரசி படுக்கையில் படுத்துக்கொண்டாள். எதிர்கால அரசனைக் கொண்டிருக்கும் அவள் வயிற்றின்மேல் முடிவைக்கப்பட்டு, முடிசூட்டப்பட்டதாகக் கருதப்பட்டது.

அரசி மாகி, தன் விருப்பத்திற்கேற்றாற்போல, ஒரு ஆண்குழந்தையையே பெற்றெடுத்தாள். அந்தக் குழந்தை அரசன், இரண்டாவது சாபர் என்னும் பெயருடன் நீண்டகாலம் ஆட்சிபுரிந்தான்.

ஃ ஃ ஃ

நானே என்னுடைய தாத்தா

அமெரிக்காவில் பிலடெல்பியாவைச் சேர்ந்த மார்க் டுவெயின் என்பவன் தற்கொலைசெய்து கொள்வதற்கு முன்பு ஒரு குறிப்பு எழுதி வைத்திருந்தான். அதில் அவன் கூறியிருந்தது வருமாறு:

“நன்றாக வளர்ந்த மகளையுடைய ஒரு விதவையை நான் மணந்துகொண்டேன். என்னு

டைய தந்தை, என்னுடைய வளர்ப்பு மகள் மீது காதற்கொண்டு அவளை மணந்துகொண்டார். எனவே என் தந்தை அம்முறையில் எனக்கு மருமகனானார். எனது வளர்ப்பு மகள் என் தந்தைக்கு மனைவியானதால் எனக்குத் தாயானாள்.

என்னுடைய மனைவிக்கு மகன் ஒருவன் பிறந்தான். அவன் என்னுடைய தந்தைக்கு மைத்துனன் ஆனான்; எனவே எனக்கு மாமன் ஆனான்.

என்னுடைய தந்தையின் மனைவி அதாவது எனது சிறிய தாய் ஒரு மகனை ஈன்றெடுத்தாள். அவன் எனக்குச் சகோதரன் ஆனான்; அதே நிலையில் அவன் எனது மகளுடைய மகனாதலால், என்னுடைய பேரனும் ஆனான்.

என்னுடைய மனைவி எனக்கு ஒருவிதத்தில் பாட்டியாகவேண்டும்; ஏனெனில், என்னுடைய சிறியதாயாருடைய தாயார் அவள். நான் என் மனைவிக்குக் கணவனாகவும், அதே சமயத்தில் பேரனாகவும் இருக்கிறேன். பாட்டியினுடைய கணவர், ஒருவனுக்குத் தாத்தா முறை ஆக வேண்டுமாதலால், நானே என்னுடைய தாத்தாவாகவும் ஆகிறேன்!"

ஃ ஃ ஃ

ஒரு வாரத்தில் இரண்டு வியாழன்கள்

போப் மூன்றாவது யூஜினே என்பவர் கி. பி. 1147-ம் ஆண்டில் பாரிஸ் நகரத்துக்கு வருகை தந்தார். அவர் திட்டமிட்டிருந்தபடி அவர் பாரிஸ் நகரம் வந்துசேரும் நாள் வெள்ளிக்கிழமையாக இருந்தது. வெள்ளிக்கிழமை நோன்பு நாளாக இருந்ததால், போப்பாண்டவரை வரவேற்கவேண்டிய முறைப்படி, ஆடம்பரமாகக் குதூகலத்துடன் வரவேற்கமுடியாமற் போகிறதே, வெள்ளிக்கிழமை குறுக்கே வந்து நிற்கிறதே என்று மக்கள் வருத்தப்பட்டனர். மக்களின் வருத்தத்தைப் போக்கவேண்டி, போப்பாண்டவர் அந்தக் குறிப்பிட்ட வெள்ளிக்கிழமையை வியாழக்கிழமையாக வைத்துக் கொள்ளும்படியாகக் கட்டளை பிறப்பித்தார். அதன்படி வெள்ளிக்கிழமை வியாழக்கிழமையாகக் கருதப்பட்டு, குதூகலமான வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்த ஒரு வாரத்தில் மட்டும் இரண்டு வியாழக்கிழமைகள் பாரிஸ் மக்களால் கொள்ளப்பட்டன!

ஃ ஃ ஃ

நாக்கினால் பியானோ வாசிப்பு

ஹெயின்ரிச் நோஸ்டே என்ற ஆஸ்திரியாவைச் சேர்ந்த சிறந்த இசைவாணர், தம்முடைய நாக்கினாலேயே பியானோ என்ற ஹார்மோனியத்தை வாசித்துக் காண்பித்தார். அவருடைய நாக்கு, கைவிரலைப்போல் அவ்வளவு உறுதிபடைத்திருந்தது.

ஃ ஃ ஃ

மறத்திற்குப் பெயர் அறம்!

கிருத்தவ மதவிசாரணைக்குழுவுக்குத் தலைமைவகித்த பீட்டர் அர்பூயெஸ் என்பவர், தம்முடைய ஆதிக்கக் காலத்தில் ஏறத்தாழ 40,000 மக்களைச் சுட்டெரித்துக் கொன்றார். மதக் கருத்துக்களைத் தழுவி நடக்கவில்லை, சில வேளைகளில் அவைகளை எதிர்க்கவும் செய்தார்கள் என்பதுதான், அவர்கள் செய்ததாகச் சாட்டப்படும் குற்றம். 40,000 மனித உயிர்களை அன்பின்பேரால் போக்கிய அவருக்குப், போப்பாண்டவர் 'மகான்' என்ற பட்டத்தை 1860-ல் வழங்கினார். மறச் செயல்புரிந்தவர்க்கு மதம் வழங்கும் பரிசு அறச்செயல் வீரர் என்ற பட்டம். மறத்திற்குப் பெயர் அறம்! மதத்திற்குத்தான் எதையும், எப்படியும் வழங்க உரிமையுண்டே!

ஃ ஃ ஃ

செத்து மடிந்தபிறகு தூக்கு

இங்கிலாந்தில் முதலாம் சார்லஸ் மன்னன் வெட்டி வீழ்த்தப்பட்ட பிறகு, அரசாட்சியைக் குடியாட்சியாக மாற்றி, ஆலிவர் கிராம்வெல் ஆட்சிப்பீடம் ஏறினான். அவனும் சர்வாதிகாரியாக மாறி, மக்களின் எதிர்ப்பைப் பெருமளவுக்கு வளர்த்துக்கொண்டான். அவன் இறந்து சிலகாலம் கழித்தபிறகும், மக்களின் சினம் அடங்காத காரணத்தால், அவனுடைய எலும்புக்கூட்டை மீண்டும் தோண்டி எடுத்துத் தூக்கில் போட்டு மக்கள் தம் ஆத்திரத்தைத் தீர்த்துக்கொண்டார்கள்.

பொங்கல் வாழ்த்து

க. அன்பழகன் எம். ஏ.

பொங்குக பொங்கல் பசும்பாற் சுவையில்!
அன்புறு சுற்றமும் இன்புறு நட்பும்
புத்தாண்டு விழாவில் பொருந்தி வாழி!
உழவராந் தமிழர் ஓகையிற் போற்றும்
விழவுடை இந்நாள் விழிப்புடன் எழுந்தே
பெருந்தகை அறிஞர் அண்ணு தலைமையில்
கருத்துடைச் சொல்லே கலப்பையாக் கொண்டு
தமிழர்தம் நெஞ்சே கழனியா யமைத்து
நிரம்பிய மடமையே கரம்பா மாகலின்
ஆய்ந்து காணுவான் ஆழமாய் உழுது
பகுத்துணர் வென்னும் பயனெரு விட்டுத்
தன்னுணர் வென்னும் தண்ணீர் தேக்கி
இனப்பற் றென்னும் விதையினை வித்தி
ஒற்றுமை யென்னும் பயிரினை வளர்த்தே
யாதும் ஊரே யாவருங் கேளிர்
ஒன்றே குலமும் ஒத்ததே பிறப்பும்
என்றே நின்ற தமிழ்நெறி மாய்த்த
ஆரிய வைதிகக் கள்ளியை யழித்தும்
ஆதிக்க வடவர் ஆட்சியை யொழித்தும்
தமிழகப் பரப்பின் வரப்பினை எடுத்தும்
திராவிட நிலத்தின் வேலியைக் கோலி
முத்தமிழ் முழங்கத் தமிழாட்சி தழைக்க
மும்முரசு ஒலிக்கப் புத்துணர்வு ஓங்க
முரண்கெடு வாகையார் முரியா வல்சி
அன்பு நிலையா ஆற்றல் நற்கலமாக்
கண்ணியம் விறகா கடமையே அனலா
முயற்சித் தீயி னேற்றிப்
பொங்கிப் படைத்து இனத்துடன் கூடி
வழங்கி வாழ்கென வாழ்த்துதும் யாமே!

:: தையற்கலை ::

[கே. பி. சுந்தரம் G. C. T.]

கட்டோரி ப்ளவுஸ்

இந்த நாகரிக ப்ளவுஸ் சினிமாக்களிலும், நாடகங்களிலும் பெரும்பாலும் அணியப்படுவதைக் காணலாம். இந்த உடை உடம்போடு ஒட்டியபடி அணிவதாகும். இந்தப் ப்ளவுஸ் உடலின் வளைவு நெளிவுகளின் அமைப்பிற்கு ஏற்றவாறு வெட்டித் தைப்பதனால் பார்வைக்கு மிகவும் அழகாகவும், கச்சிதமாகவும் தோற்றமளிக்கும். ப்ளவுஸ் அல்லது சோலியை நன்கு வெட்டப்பழகிய பிறகு இந்தக் கட்டோரி ப்ளவுஸ் வெட்டுவதற்கு மிகவும் இலகுவாக இருக்கும். முன்பக்கம் மூன்று துண்டுகள் (யோக்) உடையதும் இடுப்புப்பட்டியும் உள்ள கட்டோரி ப்ளவுஸ் ஆகும். முதலில் இதை தேவையான அளவில் காகிதத்தில் வரைந்து, வெட்டி யெடுத்துக்கொண்டு பிறகு துணியின்மீது வெட்டிய துண்டுகளின்படி வெட்டவேண்டும். முன்பக்கம் (யோக்) துண்டுகள் மூன்றும் தனித்தனியாக வெட்டியெடுத்து பிறகு சேர்த்துத்தைக்கவும். முன்பக்கம் திறப்பு அமைக்கவும். (ஓட்பன்) விளக்கப்படத்தின் வடிவம்போல் அமைந்து இருக்கின்றதாவென்று ஒருமுறைக்கு இரு முறை ஒத்திட்டுப்பார்த்து, நன்கு கவனித்துப் பிறகு வெட்டத் தொடங்கவும்.



அளவுகள்

முழுநீளம்	14 அங்.
பாதித் தோள்	6¾ ,,
மார்பு சுற்றளவு	34 ,,
இடுப்பு சுற்றளவு	28 ,,

1-ல் இருந்து 0 வரை 13 அங்.
(முழு நீளத்தில் இடுப்புப்பட்டி அகலம் 1½ அங். குறைவு)

2-ல் இருந்து 0 வரை 7 அங்.
(¼ மார்பளவில் 1½ அங். குறைவு)

3-ல் இருந்து 0 வரை 3 அங்.

4-ல் இருந்து 0 வரை 7 அங்.
(பாதித்தோள் + ¼ அங். தையலுக்கு)

5-ல் இருந்து 4 வரை ½ அங்.

6-ல் இருந்து 4 வரை நேர்க்கோடு இணைக்க.

7-ல் இருந்து 2 வரை 9½ அங்.
(¼ மார்பு + 1 அங்.)

8-ல் இருந்து 1 வரை 9½ அங்.
(¼ மார்பு + 1 அங்.)

9-ல் இருந்து 8 வரை ¾ அங்.

10-ல் இருந்து 0 வரை 1½ ,,

11-ல் இருந்து 6 வரை 1½ ,,

12-ல் இருந்து 1 வரை 4½ ,,
(9-க்கும் 1-க்கும் மத்தியம்)

13-ல் இருந்து 14 வரை 13 அங்.
(முழுநீளத்தில் இடுப்புப்பட்டி அகலம் 1½ அங். குறைவு)

14-ல் இருந்து 8 வரை 9¾ ,,
(¼ மார்பு + 1¼ அங்.)

(அடுத்த இதழில் முடிவுறும்)

Regd. No. M 6296

எமது புதிய வெளியீடுகள்

சிறைச்சோலையில் பூத்த மலர்கள்
திராவிடப்பண்ணை தரும் தேன்விருந்து
தமிழன்னைக்கு கலைஞர் சூட்டும் தங்கமகுடம்

இரத்தக் கண்ணீர் 2 0 0

நாடக வேந்தர் மு. கருணாநிதியின் புதிய கற்பனை. பொன்னின் ஒளி வீசும் எழுத்தோட்டம். தெவிட்டாத தெள்ளமுதம்.

ஆறுமாதக் கடுங்காவல் 2 0 0

திராவிட வரலாற்றுக்குத் துணைபுரியும் நல் ஏடு. கருணாநிதியின் கல்லக்குடி போராட்டக் குறிப்புகளும், சிறைவாழ்வின் வர்ணனைகளும் அடங்கிய சிந்தனைச் சுவடி. கருணாநிதி எழுதியது.

முத்தாரம் 1 0 0

புரட்சி எழுத்தாளர் கருணாவின் பேனாமுனை எழுப்பும் புதுமுறை. ஆம்; கற்பனைக்கே புதியவழி காணுகிறார் இந்த நூலின் மூலம். அறிஞர் உலகும் இளைஞர் உலகும் சுவைத்துப் பயன்காணும் அறிவுச் சோலை.

திராவிடப்பண்ணை

தெப்பக்குளம் :: திருச்சி.

உடலுக்கேற்ற உடை
உழைப்புக்கேற்ற ஆடை
காலத்திற்கேற்ற அமைப்பு
கண்ணுக்கழகான தோற்றம்
இவைகளுடன்
உறுதியான தையலும்
உயர்தரமான தொழில் திறனும்
கொண்ட
ஆடைகளை விரும்புவோர்
வருகைக்குரிய

தையல் தொழில் நிலையம்

கே. பி. சுந்தரம்

(அரசாங்கச் சான்றுபெற்றவர்)
148, புரசைவாக்கம் ஹைரோடு,
சென்னை 7.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. A.,
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.